Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY SM TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472
(சி-2015)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 07 (30.01.2004) வெள்ளிக்கிழமை இதழ்:121

### தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் முன்

## எழுதுமட்டுவாழ் மக்கள் நேற்று மறியற்போராட்டம்

(சாவகச்சேரி)


எழுதுமட்டுவாழ் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலையை சொந்த இடத்தில் இயங்க அனுமதிக்கக்கோரி தென்மராட்சி வலயத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 10.00 மணிக்கு எழுதுமட்டுவாழ் வடக்கு பிரதேச் பொது மக்கள் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எழுதுமட்டுவாழ் வடக்கு தமிழ்கலவன் பாடசாலை, 2000ம்ஆண்டு தென்மராட்சி பகுதியில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகளின் காரணமாக செயலிழந்தது.

தற்போது தொடர்ந்துவரும் சமாதான உடன்படிக்கையின் பின்னர் மக்கள் எழுதுமட்டுவாழ் பகுதியில் மீளக் குடியமர்ந்தும், மேற்படி பாடசாலை உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கின்றமையால் இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

எழுதுமட்டுவாழ் வடக்குப் பாடசாலை தற்போது தற்காலிகமான இடம் ஒன்றில் இயங்கிவருகின்றது.

இந்த மறியற்போராட்டத்தில் கலந்துகொண்ட



மக்கள், எமது பாடசாலையை மீளத்திறந்துவிடு, கிராமப் புறக்கல்வியை அழிக்காதே, எமது பிள்ளைகளை சுதந்திரமாக கல்வி கற்கவிடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் மீது பெற்றோல் ஊற்றி இனந்தெரியாத நபர்கள் தீ வைப்பு!

### மட்டுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வயலில் சூடடித்துவிட்டு வீடு திரும்பிய இளைஞன் மீது இனந்தெரியாத நபர்கள், பெற்றோல் ஊற்றித் தீ வைத்துக் கொளுத்தினர்.

மேற்படிச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது. சம்பவத்தின்போது தெய்வேந்திரம் ஜெசிந்தனன் (வயது-20) எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரப் பகுதியில் சடலமொன்று மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியினுள் உள்ள மதுபான நிலையம் ஒன்றின் முன்பாக சடலமொன்று கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தச் சடலம் நேற்றைய தினம் இரவு 9.30 மணியளவில் யாழ். பொலிஸ் நிலைய பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இறந்தவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகள் குறித்து ஆராய மிலிந்த மொறகொட ஐரோப்பா பயணம்

## தமிழ்ச்செல்வன் குழுவையும் சந்திக்கலாம்!

(கொழும்பு)

**இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்கு, அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவொன்று நெதர்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறது. இந்தக் குழு இரண்டு நாடுகளுடனும் சமாதான முயற்சிகள் குறித்துப் பேச்சு நடத்தும் என்று ஐரோப்பிய யூனியன் தெரிவித்தது.**

**இது குறித்து ஐரோப்பிய யூனியன் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,**

அமைச்சர் மிலிந்த மொறகொட சுவீடனின் வெளிவிவகார அமைச்சர் லெய்லா பிரீவல்ட்டுடனும், நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் அக்னஸ் வான் அடர்னேயுடனும் சர்வதேச அபிவிருத்தி உறவுகள் குறித்துப் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய யூனியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவொன்று சுவீடன், இத்தாலி, ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் பிரசெல்ஸிலுள்ள ஐரோப்பிய ஆணையகம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து தற்போதைய நிலையில், சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

புலிகள் தரப்பு உயர்மட்டக்குழு ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்திருக்கும் நிலையில், அமைச்சர் மிலிந்த மொறகொடவும் அங்கு விஜயம் செய்திருப்பது - சமாதான முயச்சிகளை மீளவும் ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடாக இருக்கக் கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

## மின்சாரக் கட்டணம் மீண்டும் உயர்கிறது

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து மின்கட்டணத்திற்கான அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுள்ளது.


இதன்படி, ஒரு யுனிற்றுக்கான மின்கட்டணம் இரண்டு ரூபா இருபத்தைந்து சதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதுவரை, முதல் 40 யுனிற்றுக்கு இலங்கை மின்சாரசபை மூன்று ரூபா ஐம்பது சதத்தை கட்டணமாக விதித்துவந்தது. பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து அதிகரிப்பு கட்டணத்துடன் ஐந்து ரூபா ஏழுபத்தைந்து சதம் மின் பாவனையாளர்களிடம் அறவிடப்படவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க அரசாங்கத்துடன் தனியாக போட்டியிட முடியாததாலேயே சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பு!

### சோமவன்ச அமரசிங்க கூறுகிறார்



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை தனிக்கட்சியாக இருந்து தோற்கடிக்க முடியாத காரணத்தாலேயே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கிய தாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற ஐக்கிய சுதந்திர முன்னணியின் முதலாவது பொதுக்கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,எதிர்வரும் தேர்தலில் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இருக்கின்றோம். சகல மக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு புதிய (12 ஆம் பக்கம் பார்க்க)

### உயர்பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம்

## சட்டமா அதிபரிடம் விளக்கம்கோரி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளமுடியுமா என்று உயர் நீதிமன்றம் சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் இரண்டு விவசாயிகள் உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கவேண்டும் எனக்கோரி - உயர் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, சட்டமாஅதிபர் அறிக்கை ஒன்றை உயர்நீதிமன்றில் சமர்ப்பித்தார். இதில் நாவற்குழிப் பகுதியில் மாத்திரம் விவசாய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது.

சட்டமா அதிபரின் இந்த அறிக்கை நடைமுறைக்கு ஏற்புடையதல்ல எனச் சுட்டிக்காட்டிய உயர்நீதிமன்றம், எதிர்வரும் 25ம் திகதி உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள் குடியேற்றம் தொடர்பில் சட்டமா அதிபர் அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த, நிலையில் எதிர்வரும் 25ம் திகதி குறிப்பிட்ட மனு தொடர்பாக இணக்கம் ஒன்றை எட்டுவதா அல்லது விசாரணையை தொடர்வதா என்பது குறித்து உயர் நீதிமன்றம் தீர்மானிக்கவுள்ளது. (01)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:-jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடி பொருட்களினால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கும் நோக்குடன்

**யுனிசெப் அனுசரணையுடன்**

**வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில் நுட்ப நிறுவனம்**

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கோட்டரீதியாக யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கும்

**பரிசுப் போட்டி**

**கட்டுரை, சித்திரப் போட்டிகள்**

| கோட்டம் | பரீட்சைநிலையம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | யா/வைத்தீஸ்வராக் கல்லூரி | 31.01.2004 | காலை 10.00 |
| கோப்பாய் | யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 31.01.2004 | காலை 10.00 |
| நல்லூர் | யா/நல்லூர் எச்.ரி.எம்.எஸ் | 31.01.2004 | காலை 10.00 |
| கரவெட்டி | யா/நெல்லியடி மத்திய ம/வி | 02.02.2004 | காலை 10.00 |
| பருத்தித்துறை | யா/வட இந்து மகளிர் கல்லூரி | 02.02.2004 | காலை 10.00 |
| மருதங்கேணி | யா/உடுத்துறை மகளிர் வித்தி. | 02.02.2004 | காலை 10.00 |
| சாவகச்சேரி | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 02.02.2004 | பி.ப. 03.00 |
| | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி | 02.02.2004 | பி.ப 03.00 |
| வேலணை | யா/நயினாதீவு மகாவித்தியாலயம் | 09.02.2004 | பி.ப 01.30 |
| | யா/புங்குடுதீவு மகா வித்தியா-லயம் | 03.02.2004 | காலை 10.30 |
| | யா/வேலணை சரஸ்வதி வித்தி-யாலயம் | 06.02.2004 | காலை 10.30 |
| ஊர்காவற்றுறை | யா/சென் அன்ரனிஸ் கல்லூரி | 10.02.2004 | காலை 10.30 |
| | காரைநகர் கலாநிதி -தியாகராசா ம.ம.வி | 02.02.2004 | பி.ப 01.30 |
| நெடுந்தீவு | யா/நெடுந்தீவு ம.வி | 11.02.2004 | மதியம் 12.00 |
| உடுவில் | இராமநாதன் கல்லூரி | 02.02.2004 | பி.ப 02.30 |
| தெல்லிப்பளை | இராமநாதன் கல்லூரி | 02.02.2004 | பி.ப 02.30 |
| சங்கானை | வட்டு இந்துக் கல்லூரி | 03.02.2004 | பி.ப 02.30 |
| சண்டிலிப்பாய் | சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | 03.02.2004 | பி.ப 02.30 |

**வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில் நுட்ப நிறுவனம்**

இல.63, பலாலி வீதி, திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.

(சி/2185) தொலைபேசி இல. 021-222-5932


## பலாலி ஆசிரியர் கலாசாலை கலந்துரையாடல் நாளை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை பலாலி ஆசிரிய கலாசாலை நடைபெறும் தினமாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால் அனைத்து விரிவுரையாளர்களையும், கற்பித்தற் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரிய மாணவர்களையும் தவறாது சமூக மளிக்குமாறு அதிபர் தறிவித்துள்ளர்.


**தேவை**

தச்சு, உலோக ஒட்டு வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை. திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும்.

**நரீன்**

**தளபாட நிலையம்**

273, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (சி-2173)


## யாழ்.செஞ்சிலுவை சங்கத்துடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கணபதிப்பிள்ளை குலசிங்கம் அல்லது முத்துசாமி கனகம்மா 1 ஆம் வட்டாரம் அனலைதீவு.

துரைராஜா தெய்வானை மணற்புல், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

மாசில்லாமணி மாரிமுத்து, சத்தியபுரம், உடுவில் தெற்கு சுன்னாகம்.

ஜெ.செபமாலை, புனித நகர் கற்கோவளம், பருத்தித்துறை.

தார்ஸிசியஸ் லிப்னா மேரி புனிதநகர் கற்கோவளம், பருத்தித்துறை.

ஜெ.அந்தோனியாப்பிள்ளை, புனித நகர் கற்கோவளம், பருத்தித்துறை.


**திறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்

பிரசாந், கிரண் நடித்த

**வின்னர்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, 8.45 (பு.நே.)

(சி-2004)



**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

**ஜெய்**

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-2005)



**The Management of Apollo Hospitals, Colombo**

takes great pleasure in inviting

*People of Jaffna*

to the

Opening Ceremony of Apollo Hospitals Information Centre in Jaffna

on

Saturday 31st of January 2004 at 11.30 a.m.

at

Apollo Hospitals Information Centre

No.212,

Stanley Road,

Jaffna.

Apollo Hospitals COLOMBO

(சி/2187)



யாழ்ப்பாண மக்கள் 31-01-04 இல் ஆரம்பிக்கும் அப்பலோ மருத்துவமனையின் சேவையை மிகுந்த நம்பிக்கையுடன் வரவேற்கிறார்கள்......





தேவையின் அவசியத்தை உணர்ந்து சேவையாற்ற முன்வரும் மருத்துவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

(C-2186)

**WELCOME Appollo Hospital to JAFFNA**

KANTHAN ARUL,
212, STANLEY ROAD, JAFFNA.

BY
ARASCO AND SRIRAMS FAMILY MEMBERS.

# ஜே.வி.பி-சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு சிறந்ததொரு அரசியல் முன்னெடுப்பாகும்!

## தேசிய பிக்குமார் முன்னணி தெரிவிப்பு

ஜே.வி.பி - சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டு ஒப்பந்தம் சிறந்த அரசியல் முன்னேற்ற கரமான செயல் என தேசிய பிக்குமார் முன்னணி என்ற பௌத்த மத அமைப்பு பாராட்டுத் தெரிவித்துள்ளது. தேசிய பிக்குமார் முன்னணியின் தலைவர் சங்கைக்குரிய தம்பில அமர தேரர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஜே.வி.பி கட்சியின் நாட்டுப்பற்று மிக்க செயலாகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் அது கொண்டுள்ள கூட்டுக் கருதப்படுகின்றது. தேசத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் இருகட்சிகளும் செயற்பட்டு வருகின்றமை வரவேற்கத்தக்கது.

எமது ஆதரவு அந்தக் கட்சிகளுக்கு என்றும் உரித்துடையது. ஐக்கிய தேசிய முன்னணி நாட்டில் பல குழப்பங்களை உண்டுபண்ணியுள்ளது. அந்தக் கட்சியை இந்தப் புதிய கூட்டுக் கட்சிகள் தோற்கடிக்க வேண்டும்.

இந்தக் கட்சிகள் தமக்கிடையே சிறந்த புரிந்துணர்வைப் பேணுவதன் மூலம் தொடர்ந்தும் நல்ல செயல்களை முன்னெடுக்கமுடியும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணி மிகவும் முக்கிய அரசியல் வெற்றி எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

# பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு 900 ரூபாவால் சம்பளம் உயர்வு!

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான சம்பள உயர்வு அறிவித்தலின்படி பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் உதவி இன்ஸ்பெக்டர்கள் - 900 ரூபா சம்பள உயர்வைப் பெறவுள்ளதாக அரசாங்கப் பேச்சாளர் அலுவலகம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

நிதி அமைச்சர் கே.என். சொக்ஸியினால் நேற்று நிதியமைச்சின் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்திற்கு பிரதமரின் ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் தலைமை தாங்கியிருந்தார்.

கடநத இரு ஆண்டுகள் பொலிஸ துறையில் உள்ள உயர் அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டமையால் இந்தச் சம்பள உயர்வு அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் அடுத்துவரும் ஆண்டுகளில் அவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர்களுக்கு 900 ரூபா சம்பள உயர்வு மட்டும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, தற்போது அறிமுகப்படுத்தப்படவிருக்கும் இந்த ஆண்டுக்கான சம்பள அதிகரிப்பானது முப்படையினருக்கும் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஜே.வி.பியின் தலைவர் சோமவன்சவை கைதுசெய்து விசாரணை செய்யவேண்டும்

## அமைச்சர் அமரதுங்க கோரிக்கை

(கொழும்பு)

சட்ட விரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய ஜே.வி.பி. கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவை கைது செய்து விசாரித்து சரியான தண்டனை வழங்கவேண்டுமென கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நாட்டைவிட்டு சட்ட விரோதமாக வெளியேற முயன்ற ஆயிரக் கணக்கானோர் இலங்கைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அப்படி இருக்கும்போது சட்ட விரோதமாக நாட்டைவிட்டு வெளியேறிய ஜே.வி.பி .கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாது விட்டால் அரசியல் செல்வாக்குடையவர்களுக்கு ஒருவகையான சலுகையளிப்பதாகிவிடும்.

சட்டம் நீதி அனைவருக்கும் பொதுவானதென்றால் சோமவன்ச கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட வேண்டும்.

குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறும் நபர்கள் விசாரணைக்குட்படுத்தல் வேண்டும் விளக்க மறியல் விசாரணையின் பின் நீதிமன்றத்தின் தீர்ப்பினடிப்படையிலேயே எநதவொரு சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய நபரும் நாட்டில் உலாவமுடியும்.

நாட்டை விட்டு சட்டவிரோதமாக வெளியேறும் ஒருவர் மீண்டும் நாட்டுக்குத் திரும்பும்போது இவா கைதுசெய்யப்பட்டு, விசாரணைக் குட்படுத்துவது நீதிமன்றத்தின் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# துப்பாக்கிகளை பதிவுசெய்ய பொதுமக்களிடம் கோரிக்கை!

(கொழும்பு)

இலங்கையில் அரசங்கத்தின் பதிவு இல்லாமல் பொதுமக்களால் பாவிக்கப்படும் துப்பாக்கிகளை பதிவு செய்யுமாறு உள்துறை பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சட்டவிரோதமாகத் துப்பாக்கி வைத்திருக்கும் நபர்கள் பெப்ரவரி29 ஆம் திகதிக்கு முன்னர் தமது துப்பாக்கிகளைப் பதிவுசெய்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

துப்பாக்கி அனுமதிப்பத்திரம் பெறாதவர்கள் தமது பிரதேச பொலிஸ் நிலையத்தில் அவற்றைச் சமர்ப்பித்து அவற்றிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதேபோல் துப்பாக்கி அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் தமது பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் அவற்றைப் புதுப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தினத்துக்குள் பதிவுளை மேற்கொள்ளாதுவிடின் சட்டவிரோத துப்பாக்கி வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உள்துறைப்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# கடந்த வருடத்தில் மட்டும் 59404 வாகன விபத்து!

## போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அறிக்கை

கடந்த வருடம் இலங்கையில் 59 ஆயிரத்து 404 மோட்டார் வாகனவிபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி 2003 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விபத்துக்களினால் 2 ஆயிரத்து 96 பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்த விபத்துக்களில் அதிகமான விபத்துக்கள் வாகனம் ஒன்றையொன்று முந்திச்செல்ல முற்பட்டபோதே, ஏற்பட்டுள்ளது இவ்வாறு 10 ஆயிரம் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இவற்றைவிட கூடியவேகத்தில் வாகனங்களைச் செலுத்தியமையினால் 9 ஆயிரத்து 863 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. சந்திகளையுடைய வீதிகளில் தவறான முறையில் திருப்பத்தை மேற்கொள்ளும்போது 1064 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. வீதிகளில் போதிய வெளிச்சம் இல்லாமையினால் 1461 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இயந்திரக் கோளாறுகள் காரணமாக 1791 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இதைவிட பாதசாரிகளினால் 1600 வீதி விபத்துக்கள் ஏற்பட்டன.

சென்ற வருடத்துடன் 2002 ஆம் ஆண்டினை ஒப்பிடுகின்றபோது 4413 விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இந்த விபத்துச் சம்பவங்கள் 2002 ஆம் ஆண்டைவிட 8 வீதத்தால் அதிகரித்துள்ளன. இதைவிட விபத்துக்களினால் ஏற்பட்ட மரணங்கள் 2002 ஆம் ஆண்டைவிட 2003 ஆம் ஆண்டு 64 ஆல் அதிகரித்துள்ளது எனப் போக்குவரத்துப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம். விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு உதவி வழங்க ஜப்பானிய அரசு முடிவு!

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக மேலும் உதவிகளை வழங்கவுள்ளதாக ஜப்பானிய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

வெளிநாட்டு கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களின் மூலமாக அதிகபண உதவித்தொகையைச் செலவிட ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்துவருகின்றது.

ஆறு இலட்சம் அமெரிக்க டொலர்களை சுவிஸ் கணணிவெடியகற்றும் நிறுவனத்தின்மூலம் கண்ணிவெடியகற்றும் பணிக்காக ஜப்பான் வழங்கவுள்ளது.

ஏற்கனவே ஜப்பானிய அரசு, கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகளுக்காக ஹலோட்ரஸ்ட், நோர்வே கண்ணிவெடி ஆலோசகர்குழு ஆகியனவும், நிதிகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட 185 பொதுமக்களின் 17 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் தமிழீழத் தேசியக்கொடியை அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கிருஸ்ணன் ஏற்றிவைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.

# நாடாளுமன்றத் தேர்தலை உடனே நடத்த வேண்டும்!

## தேசப்பற்று முன்னணி வேண்டுகோள்

(கொழும்பு)

அனைத்து மகாணசபைகளையும், மற்றும் நாடாளுமன்றத்தையும் உடனடியாகக் கலைத்துவிட்டு, தேர்தல் நடத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, தேசப்பற்று தேசிய முன்னணி கோரிக்கை விடுத்திருக்கிறது.

தேசப்பற்று தேசியமுன்னணியின் அமைப்பாளர் எல்லே குணவன்சதேரர் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் தொடர்ந்து செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போது-

பொதுத்தேர்தல் ஒன்றின் மூலமாக ஒரு புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான வாய்ப்பினை நாட்டுமக்களுக்கு வழங்கவேண்டும் என்றார்.

அத்துடன், அந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க -

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில் செய்துகொள்ளப்பட வேண்டும். அது நாட்டின் பாதுகாப்புக்கு மிகவும் அவசியமானது எனக் குறிப்பிட்டார்.

# கோழிக்குஞ்சு இறக்குமதிக்கு இலங்கை அரசாங்கம் தடை!

(கொழும்பு)

தென்கிழக்காசிய நாடுகளில் கோழிகளுக்குப் பறவைக் காய்ச்சல் நோய் பரவிவருவதையடுத்து - கோழிகள் இறக்குமதிக்கு இலங்கை அரசாங்கம் நேற்றுமுன்தினம் தொடக்கம் தடைவிதித்துள்ளது.

பறவைக் காய்ச்சல் நோய் இலங்கையில் பரவாமல்தடுப்பது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட, விசேட குழுவின் சிபார்சின்படியே கோழிகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதை உடனடியாகத் தடைசெய்ய தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவின் பரிந்துரைகளில், வெளிநாடுகளிலிருந்து கோழிவளர்ப்புக்கான உற்பத்திகள், மற்றும் அனைத்துவகையான வளர்ப்புப் பிராணிகளை இறக்குமதி செய்வதையும் தடைசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருடாந்தம் 6 இலட்சம் கோழிகளும், 500 அலங்காரப் பறவைகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவை நெதர்லாந்து, பிரிட்டன், மலேசியா, இந்தியா, ஆகிய நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பதினாறு ஓட்டங்களால் தென்னாபிரிக்கா மேற்கிந்தியதீவுகள் அணியை தோற்கடித்தது

தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில்



நடைபெற்றுவரும் ஐந்து ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் போட் எலிசபெத்தில் நடந்த இரண்டாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தா டிய தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்து வீச்சாளர் களுக்கு முகம் கொடுக்க முடியா மல் தனது விக்கெட்டுக்களை அடுத் தடுத்து இழந்தது.

அதன்பின்னர், நன்றாக விளை யாடிக்கொண்டிருந்த டிப்பென்னரு டன் ஆறாவது விக்கெட்டுக் காக இணைந்த் பொலக் மிகச் சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக் கையை கௌரவமான நிலைக்கு உயர்த்தினர். ஐம்பது ஓவர் நிறைவில் தென்னாபிரிக்கா ஏழு விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதில் டிப்பென்னர் 83, பொலக் 26 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கொலிமோர் மிகச்சிறப்பாகப் பந்துவீசி 3 விக் கெட்டுக்களையும், டிலான், ராம் பவுல், கைல் மற்றும் கேளி ஆகி யோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி பொலக் கின் பந்துவீச்சில் திணறியது. இதில் ஸ்மித், ராம்பவுல் இருவருமே அதி கூடிய ஓட்டமாக 24ஐ எடுத்தனர். அத்துடன் சர்வன், லாரா, ஜேக்கப் மூவரும் ரன் அவுட்டாகியமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதியில், மேற்கிந்தியத்தீவு கள் அணி 42.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களை எடுத்தநிலையில் 16 ஓட்டங்களால் தோல்வியடைந் தது.

பந்துவீச்சில் பொலக் 4 விக் கெட்டுக்களையும் கலிஸ் 2 விக் கெட்டுக்களையும், குளூஸ்னர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஐந்து போட்டிகள் கொண்ட



தொடரில் தென்னாபிரிக்க அணி 2:0 என்ற ரீதியில் முன்னிலையில் உள் ளது.

# அவுஸ்ரேலிய – சிம்பாப்வே போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது

வி.பி கிண்ணத்திற்காக அவுஸ் ரேலியாவில் நடைபெற்றுவரும் முத்



தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டி யின் நேற்றைய ஆட்டத்தில் அவுஸ் ரேலிய - சிம்பாப்வே அணிகளுக் கிடையில் மெல்பேர்னில் நடந்த போட்டி மழை காரணமாகக் கைவி டப்பட்டது.

முதலில் நாணயற்சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணித்தலைவர் தனது அணி களத்தடுப்பில் ஈடுபடு மெனத் தெரிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய அவுஸ்ரேலியா நிர்ணயிக்கப் பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக் கெட்டுக்களை இழந்து 263 ஓட்டத் தைப் பெற்றது.

அவுஸ்ரேலிய அணி ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோ தும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைப்பட்டது.

பந்துவீச்சில் ஸ்ரீக் 2 விக்கெட் டுக்களையும் ஹொண்டோ, மார்க் வயர், எர்வின் மற்றும் பிறைஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் சிம்பாப்வே அணி ஆடமுடியாத அளவிற்கு மழை தொடர்ந்து பெய்தமையினால் ஆட் டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

இதுவரை நடந்த போட்டிகளின் படி அவுஸ்ரேலியா 31 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும், இந்தியா 23 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும், சிம்பாப்வே ஆறு புள்ளி களைப் பெற்று மூன்றாம் இடத்தி லும் உள்ளன.

அடுத்த போட்டி அவுஸ்ரேலிய - இந்திய அணிகளுக்கிடையில் எதிர்வரும் முதலாம் திகதி பேர்த் தில் பகலிரவு ஆட்டமாக நடைபெற வுள்ளது.

விளையாட்டு

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட

# பதிவு செய்யப்பட்ட கழகங்களில் விளையாட்டுப் போட்டி நாளை

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுவிழா நாளை ஆரம்பமாகவுள்ளது.

நாளை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதிவரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கிரிக்கெட்போட்டி இடம்பெறும். அத்துடன், நாளை வலைப்பந் தாட்டமும் இதே மைதானத்தில் இடம்பெறும்.

எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் ஆண்,பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி வினைலஸ் மைதானத்திலும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதிவரை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெறுமென கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் தெரிவித்தார். (72)

# யாழ். மத்திய கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஆரம்பம்

யாழ் மத்திய கல்லூரி விளையாட்டுப் போட்டி, பொது நிகழ்வில முதல நிகழ்ச்சியாக நீச்சல் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு சாட்டி கடற்பகுதியில் நடை பெறவுள்ளது.

முதன்முதலில் இந்த நிகழ்வு கல்லூரி மட்டத்தில் ஆரம் பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றுகின்றனர்.

எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு வீதியோட்டம் நடைபெறும். மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கும் இவ் வீதியோட்டம் பிரதான வீதி வழியாக கோயில் வீதியினை அடைந்து நாவலர் வீதியூடாக கே.கே.எஸ். வீதியினை அடைந்து மத்திய கல்லூரி மைதானத்தில் முடிவடையும்.

## விளையாட்டு வீரர்களுக்கு ஓர் அறிமுகம்

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் முதன்மை பெறும் காலம் இது. உங்கள் பாடசாலை வீரவீராங்கனைகள் தம் திறமையை பல்வேறு மட்டங்களிலும் வெளிப்படுத்திய வர்கள் அவர்களின் திறமையை அங்கீகரித்துப் பாராட்ட "நமது ஈழநாடு" ஆர்வமாக இருக்கிறது.

உங்கள் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி கள் முடிவடைந்ததும் மிகச்சிறந்த வீரர், வீராங்கனை பற்றிய விபரங்களை (BEST ATHLETE) அவர்களின் புகைப்படத் துடன் அனுப்பி வையுங்கள்.

அவர்கள் ஏன் சிறந்த வீரராக அல்லது வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார் என்ற சாதனை விபரத்துடன் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய (அதிபரின் உறுதிக் கடிதம் அவசியம்) முகவரி- நமது ஈழநாடு, இல, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# பாகிஸ்தானின் தொடரிலும் ஹர்பஜன் விளையாடவில்லை

இந்திய அணியின் முன்னணி சுழல்பந்துவீச்சாளர்களில் ஒருவரான ஹர்பஜன் சிங் அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்தின்போது, இவருக்கு கைவிர லில் காயம் ஏற்பட்டது. இதனால், அவுஸ்ரேலியாவிற்கு எதிரான மூன்று டெஸ்ட் மற்றும் மூன்று நாடுகள் போட்டியில் விளையாடவில்லை. பாகிஸ் தான் தொடருக்கு அவர் உடல் தகுதி பெறுவார் என்று எதிர்பார்க்கப் பட்டது.

இந்த நிலையில், பாகிஸ்தான் தொடரில் ஹர்பஜன் சிங் ஆடுவது சந்தேகம் என்று இந்திய கிரிக்கெட் சபை தலைவர் டால்மியா கூறியுள் ளார். இது தொடர்பாக அவர் கூறும்போது, இந்திய அணியின் உடற் பயிற்சி இயக்குநர் லைபஸிடம் சஹீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோரது உடல் தகுதி குறித்துப் பேசினேன். அப்போது, தொடரில் சஹீர்கான் விளையாடலாம் என்றும் ஹர்பஜன் சிங் உடல் தகுதிபெறவில்லை என்று அவர் தெரிவித்தார். பெரும்பாலும் அவர் விளையாட வாய்ப்பில்லை என் றார்.

இதற்கிடையே, பாகிஸ்தானில் விளையாடும் இந்திய அணி கராச் சியில் போட்டி நடத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. பாதுகாப்பு காரண மாக கராச்சியில் விளையாட இந்தியா விரும்பவில்லை. வருகிற 10 ஆம் திகதி இந்திய அணியின், பாகிஸ்தான் சுற்றுப்பயண விபரம் வெளியிடப்படும் என்று தெரிகிறது. மார்ச் - ஏப்ரல் மாதங்களில் இந்திய அணி பாகிஸ்தானில் விளையாடும்.

# வீரப்பனுடன் தொடர்புள்ள நால்வருக்கு உச்ச நீதிமன்றம் மரணதண்டனை தீர்ப்பு

வீரப்பனின் கூட்டாளிகள் நான்கு பேருக்கு வழங்கப்பட்டிருந்த ஆயுள் தண்டனையை கடுமையாக்கி அதனை தூக்குத் தண்டனையாக உச்ச நீதி மன்றம் மாற்றியுள்ளது.

கடந்த 1993ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி காட்டுப்பகுதியில் கர் நாடக பொலிஸ் அதிகாரிகள் சென்ற பேரூந்தை வீரப்பனின் கும்பல் கண்ணிவெடி வைத்து தகர்த்தது. இதில் 21 பொலிஸார் பலியாகினர். மேலும் 14 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக, வீரப் பனின் கூட்டாளிகளான சைமன், ஞானப்பிரகாசம், ஹீசேகரா மற்றும் பிலவேந்திரா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது மைசூர் தடா நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. அதில் இந்த நால்வருக்கும் ஆயுள் தண்டனை விதித்து தடா நீதி மன் றம் உத்தரவிட்டது.

இந்தத் தண்டனையை எதிர்த்து நான்கு பேரும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். தங்களது ஆயுள் தண்டனையை ரத்துச் செய்து தங்களை விடுவிக்கவேண் டும் என நான்கு பேரும் கூறியிருந் தனர்.

இதை எதிர்த்து கர்நாடக அர சும் மனுத்தாக்கல் செய்திருந்தது. அதில் இந்த நால்வருக்கும் ஆயுள் தண்டனை போதாது அதை மரண தண்டனையாக உயர்த்தி கடுமை யாக தண்டிக்கவேண்டும் என கர் நாடக அரசு கோரியிருந்தது.

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதி சபர்வால், நீதிபதி அகர்வால் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் நால்வரின் ஆயுள் தண்டனையை யும் மரண தண்டனையாக உயர்த்தி நேற்று அதிரடித்தீர்ப்பு வழங்கினர்.

# தி.மு.க. வுடனான கூட்டணியில் ம.தி.மு.க. விற்கு 4 தொகுதிகள்

## கருணாநிதி அறிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையில் உருவாகியுள்ள கூட் டணியில் ம.தி.மு.க இடம்பெற்றுள் ளது.



தொகுதி பங்கீடு குறித்து தி,மு.க தலைவர் கருணாநிதியுடன் ம.தி.மு.க நிர்வாகிகள் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அப்போது உடன் பாடு ஏற்படவில்லை.

ம.தி.மு.க. கடந்த தேர்தலில் வென்ற திண்டிவனம் தொகுதி இந்த முறை பா.ம.கவுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இங்கு முன்னாள் மத் திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் போட்டியிட்டு வென்றார்.

ம.தி.மு.க போட்டியிட விரும்பும் பட்டியலுடன் ம.தி.மு.க தேர்தல் குழு வினர் எல்.கணேசன், கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் நாசரேத்துரை ஆகியோர் நேற்று முன்தினம் வைகோவை சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

அப்போது, ம.தி.மு.க போட்டி யிடும் தொகுதிகளின் எண்ணிக்கை குறித்தும் எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்தும் இறுதிக்கட்ட ஆலோசனை நடத்தப் பட்டது.

அதன் பிறகு ம.தி.மு.க நிர்வா கிகள் நேற்று முன்தினம் மாலை அண்ணா அறிவாலயத்துக்கு சென்று தி.மு.க தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை குழு தலைவர் ஆற்காடு வீரசாமி டி.ஆர்.பாலு, வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோரை சந்தித்து பேசினார்கள்.

பேச்சுவார்த்தை முடிந்து வெளியே வந்த எல். கணேசன் நிருபர்களிடம் கூறும்போது ம.தி.மு.க எத்தனை தொகுதிகளில் போட்டியிட விரும்பு கிறது. என்பதை தி.மு.க குழுவிடம் கூறிவிட்டோம் என்றார்.

ம.தி.மு.க தங்கள் கட்சிக்கு 6 தொகுதிகள் கேட்டதாக அக்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

ம.தி.மு.க கடந்த தேர்தலில் சிவகாசி, பழனி, தஞ்சை திருச் செங்கோடு, பொள்ளாச்சி, திண்டி வனம் தொகுதிகளில் போட்டியிட் டது. இதில் பழனி தவிர மற்ற 4 தொகுதிகளில் வெற்றிபெற்றது.

சிவகாசியில் போட்டியிட்ட வைகோ, திருச்செங்கோடு தொகுதியில் போட் டியிட்ட கண்ணப்பன், திண்டிவனத் தில் போட்டியிட்ட செஞ்சி ராமச் சந்திரன் பொள்ளாச்சியில் போட்டி யிட்ட டாக்டர் கிருஷ்ணன் ஆகி யோர் வெற்றிபெற்றனர்.

தற்போது சிவகாசி, வந்தவாசி, பழனி, தஞ்சை, கடலூர், பொள் ளாச்சி ஆகிய தொகுதிகளில் போட்டி யிட ம.தி.மு.க விருப்பம் தெரிவித் தது.

ஆனால், 4 தொகுதிகளை மட் டும் ஒதுக்க தி.மு.க முன்வந்துள் ளது. இதில் கட்சித் தலைவர்கள் இடையே உடன்பாடு ஏற்பட்டு இருப் பதாக கூறப்படுகிறது.

ம.தி.மு.க வுக்கு ஒதுக்கப்பட வுள்ள தொகுதிகள் குறித்து கருணா நிதி நேற்று ஆய்வு செய்தார். தொகுதி பட்டியலை நேற்று மாலை அவர் வெளியிடுவார் என்று எதிர் பார்க்கப்பட்டது.

இதற்கிடையே, மேலும் ஒரு தொகுதியை சேர்த்து 5 தொகுதி களாக ஒதுக்குமாறு கருணாநிதி யிடம் வற்புறுத்தப்பட்டுள்ளது. 4 தொகுதிகள் ஒதுக்கினாலும் ஏற்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க. - பாரதீய ஜனதா தொகுதிப் பங்கீடு விரைவில்

நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.கவும் - பாரதீய ஜனதாவும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. இரு கட்சிகள் இடையே தொகுதி பங்கீடு ஓரிரு நாளில் தொடங்குகிறது.

பாரதீய ஜனதா 10 தொகுதிகள் கேட்கிறது. திருச்சி, நீலகிரி, புதுக்கோட்டை, கோவை, சிவகங்கை, தென்சென்னை, நாகர்கோவில் ஆகிய தொகுதிகள் கண்டிப்பாக வேண்டும் என்று வற்புறுத்தி உள்ளது. மேலும் 3 தொகுதிகளை பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக்கொள்ள அக் கட்சி விரும்புகிறது.

இந்த தொகுதிகள் பாரதீய ஜனதாவுக்கு ஒதுக்கப்பட்டால் மிகுதி 32 தொகுதிகளில் அ.தி.மு.க போட்டியிடும் என்று தெரிகிறது.

# போக்குவரத்துச் சபையினரின் பேருந்தைத் தாக்கிய பொதுமக்கள் மூவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும்

## சாவகச்சேரி பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ஹர்த்தால் போராட்டத்தின்போது, வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பேருந்தொன்றைத் தாக்கிச் சேதப்படுத்தியதாகக் கூறப்படும் மூன்று பொதுமக்களையும், இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, சாவகச்சேரி நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்

யாழ்-கண்டிவீதியின் மீசாலைப் பகுதியில்வைத்து, பேருந்தை தாக்கிச் சேதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் குறித்த மூவரும், தனியார் பேருந்துகளின் சாரதி மற்றும் நடத்துநர்கள் எனவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - யாழ். மத்திய பேருந்து நிலையப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவமொன்றைக் கண்டித்து, கடந்த டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி குடாநாடு தழுவியரீதியில் ஹர்த்தால் போராட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

அப்பொழுது இடம்பெற்றிருந்த க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையை முன்னிட்டு, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்துக்கள் சில சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

அவ்வாறு யாழ்-கண்டி வீதியூடாகப் பயணித்த பேருந்தொன்றே, மீசாலைப்பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக குறித்த பேருந்தின் சாரதியால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில், கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த தனியார் பேருந்துச் சாரதி ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

விசாரணைகளின் பின்னர் சம்பவத்துடன் தொடர்புடையவர்களெனத் தெரிவிக்கப்படும் மேலும் இருவரும் கைதுசெய்யப்பட்டு, நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டிருந்தனர்.

(202)

# அரியாலையில் மீட்ட மண்டையோடு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பு !

அரியாலைப் பகுதியில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட மண்டை ஓடு - நேற்று முன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு அரியாலை ஏ-9 வீதியை அண்டிய பகுதியில், மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், மண்டை ஓட்டைக் கண்டுபிடித்து- பொலிஸார் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் இந்த விடயம் தொடர் பாக அறிவித்தனர்.

மண்டை ஓடு கண்டுபிடிக்கப்பட்ட பகுதி கண்ணிவெடி அகற்றப்படாமையினால், மண்டை ஓட்டை எடுக்கமுடியவில்லை. இதனால் கண்ணிவெடி அகற்றியபின் பொலிஸார் தமக்கு அறிவிக்குமாறு கேட்டிருநதனர்.

இதற்கமைய, நேற்றுமுன்தினம் மண்டை ஓடு காணப்பட்ட பகுதி கண்ணிவெடி அகற்றி முடிந்ததையடுத்து. இந்த மண்டை ஓட்டை நேற்றைய தினம் கண்ணிவெடி அகற்றும் அதிகாரிகள் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு ஒப்படைத்தனர்.

# முறைப்பாட்டுப் பத்திரத்தினைக் கேட்ட பெண்ணை மிரட்டிய பொலிஸார் !

பொலிஸில் முறைப்பாடு செய்த பெண் - முறைப்பாடு செய்தமைக்கான அத்தாட்சிப் பத்திரத்தை கேட்டபோது, அந்தப்பெண்ணை பொலிஸார் மிரட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்தவாரம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

குறித்த பெண் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு ஒன்றை செய்துவிட்டு, முறைப்பாட்டுக்கான அத்தாட்சிப் பத்திரத்தினை கேட்டபோது, அதனை தரமுடியாது என பொலிஸார் மிரட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பெண் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரியை மனித உரிமை ஆணைக்குழுவினர் விசாரணை செய்தபோது, தாம் அவ்வாறு நடந்து கொள்ளவில்லையனெவும், முறைப்பாடு செய்யும் அனைவருக்கும் முறைப்பாட்டுக்கான அத்தாட்சிப் பத்திரத்தினை வழங்கி வருவகின்றோம் எனவும் அந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (தீ)

### மனிதாபிமான அடிப்படையில்

# வயோதிபரை பொறுப்பேற்க முன்வருமாறு கோரிக்கை

சாவகச்சேரி வைத்தியசாலையில் தங்கியுள்ள வயோதிபர் ஒருவரை, மனிதாபிமான அடிப்படையில் எவராவது பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை அதிகாரி எஸ்.அம்பிகைபாகன் தெரிவித்துள்ளார்.

மிதிவெடியில் அகப்பட்டு, காலை இழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்த வயோதிபர், சிசிக்சை பெற்று குணமடைந்தபோதும், தனக்கு உறவினர் எவரும் இல்லையென தெரிவித்து வைத்தியசாலையிலேயே தொடர்ந்து தங்கியுள்ளார்.

இவரை - ஏதாவது பொது நிறுவனங்களோ, தொண்டு அமைப்புக்களோ மனிதாபிமான ரீதியிலே பொறுப்பேற்க வேண்டுமென, வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். அதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது, உயிரிழந்த இரு வயோதிபர்களின் சடலம் உரிமை கோரப்படாமல் வைத்தியசாலைப் பிரேத அறையில் வைககப்பட்டுள்ளன.

உறவினர்கள் இந்த வயோதிபர்களின் சடலங்களை பொறுப்பேற்கும்படியும், இல்லாவிடின் அரச செலவில் அடக்கம் செய்யப்படும் எனவும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (25)

# விஞ்ஞானச் சங்கம் நடாத்தும் கண்காட்சிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்கில், யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கம் கண்காடசிப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. வடமாகாணத்திற்குட்பட்ட தமிழ் பாடசாலைகளுக்கிடையிலேயே இந்தப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் அனைத்தும்- பெப்ரவரி 25,26,27 ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் - மாணவர்கள் விஞ்ஞான ரீதியான தமது கண்டுபிடிப்புக்கள், சூழலியல் சார்ந்த காட்சிப் பொருட்கள் என்பவற்றை காட்சிப்படுத்த முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர்களை பெப்ரவரி 7 ஆம் திகதிக்கு முன்பாகப் பாடசாலை அதிபருடைய உறுதிப்படுத்தலுடன், உதவிப் பொதுச் செயலாளர், யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம். எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தமுறை நடைபெறும் கண்காட்சிகளின்போது - தகவல் தொழில்நுட்ப பூங்காவினுடைய கணினிக் கண்காட்சியும், அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், யாழ்ப்பாண பல்லைக்கழகம் ஆகியவற்றின் கண்காட்சிப் பொருட்களும் காட்சிப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கணக்காய்வு உத்தியோகத்தர் தெரிவுப் போட்டிப்பரீட்சை

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் உள்ளக் கணக்காய்வு உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையானது - இன்று காலை 9 மணி முதல் 12 மணிவரையும் கொழும்பு மாலபே ஸ்ரீ ராஇல மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (44)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : க.கீர்த்தனா

முகவரி : நோர்வே.


# சின்னஞ்சிறு செய்திகள்

### ஏகாதசி விரத நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகவரத நாராயண ஆலயத்தில், ஏகாதசி விரத விசேட பூசை வழிபாடுகள் எதிர்வரும் திங்கட்சிழமை காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் ஐந்தாம் திகதி தைப்பூச நிகழ்வும் சிறபபாக நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும், விழாக் காலங்களில் நாராயண சுவாமி வெளிவீதி உலாவருவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு அம்பாள் சனசமூக நிலையத்திற்கு, புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த தைப்பொங்கல் தினத்தன்று நிலைய முன்னாள் தலைவர் சி.சதீஸ் தலைமையில் இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன.

புதிய நிர்வாகசபையின் தலைவராக என்.எஸ்.நல்லதம்பியும், செயலாளராக இ.அம்பிகைபாகனும், பொருளாளராக ஆ.பிரபாகரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நிலையப் போசகராக சி.நல்லதம்பியும் தெரிவு செய்யப்பட்டார். (ச)

### விபரம் திரட்டும் இராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் வீடு வீடாகச் சென்று, படையினர் வீட்டு உரிமையாளர் பெயர் மற்றும் வீட்டில் குடியிருப்போர் விபரம் முதலானவற்றைச் சேகரித்துச் சென்றுள்ளனர்.

சமாதான முயற்சிகள் நடைபெற்றுவரும் இந்தச் சூழலில் இத்தகைய நடவடிக்கையில் படையினர் ஈடுபடு வது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ப)

### சென்னைப் பேராசிரியர் உரை

(யாழ்ப்பாணம்)

சேக்கிழார் விழாவில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள - சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அரங்க. ராமலிங்கம் - நல்லூர் கம்பன் கோட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவொன்றை நிகழ்த்தவுள்ளார்.

'காணுதி மெய்மை' எனும் தலைப்பிலான பேராசிரியரின் உரை, எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்கவுள்ளார். தொடக்கவுரையை கொழும்பு கம்பன் கழக தலைவர் தெ.ஈஸ்வரனும், வாழ்த்துரையை கம்பகவல க.சிவராமலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர்.

### கும்பாபிஷேக நிகழ்வு

(வடமராட்சி)

இமையாணன் வடக்கு மாத்தோட்டை சிவஞான வைரவர் தேவஸ்தான - மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 4 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், சிறப்புரையை ஆசிரியர் ஆறுதிருமுருகனும் நிகழ்த்தவுள்ளரென தேவஸதான பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (116)

### ஞானச்சுடர் வெளியீடு

(வடமராட்சி)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் வெளியிடப்படும் ஞானச்சுடர் நூல் வெளியீடு - ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும், மதிப்புரையை ஆ.சிவநாதன் ஆசிரியரும் நிகழ்த்தவுள்ளனர். (17)

### இலவச ஆங்கில வகுப்பு

மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நியைத்தினரால், மாணவர்களிடையே ஆங்கில அறிவை மேட்படுத்தும் நோக்கோடு, இலவச ஆங்கில வகுப்பு நடாத்தப்படவுள்ளது.

தரம் 5 முதல் தரம் 11 வரையான மாணவர்கள் இந்த இலவச வகுப்பில் கலந்துகொள்ளலாம் எனவும், கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் நாளைமறுதினம் நிலையத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறும் இந்த சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (24)

### பொதுமலசல கூடமின்றி பொதுமக்கள் அவதி

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரில் பொது மலசலகூடம் இல்லாது, பொதுமக்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் கிட்டத்தட்ட 1000 பேர் அளவில் போக்குவரத்துச் செய்கிறாரகள். இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டியும், மினிபஸ்களும் காலை 5 மணி முதல் இரவு 9 மணிவரை போக்குவரத்துச் செய்யும் இடமாகையால், அங்கு மலசல கூடம் அமைக்கப்படாததால், பொதுமக்கள் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் சார்பில், மலசல கூடம் அமைக்கப்படவேண்டுமென சம்மந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

### இருதயத்துடிப்பு கணிக்கும் இயந்திரம் அன்பளிப்பு

புலோலியைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் வாழும் வைத்திய கலாநிதி குமாரசாமி சேனாதிராஜா- பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 2 இலட்சம் பெறுமதியான, சத்திர சிகிச்சையின்போது இருதயத் துடிப்பு, நாடிதுடிப்பு கணிக்கும் இயந்திரத்தை அள்பளிப்பாக வழங்கியுள்ளார். (17)

### தளபாடங்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழையமாணவர் சங்க லண்டன் கிளை - ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை வழங்கியுள்ளது.

இந்த தளபாடங்கள் பௌதிக ஆய்வு கூடத்திற்கும், நூலகத்திற்கும் பாவிக்கக்கூடிய தளபாடங்களே வழங்கப்பட்டுள்ளன.

இந்த தளபாடங்களை லண்டன் பழைய மாணவர் சங்கம் சார்பில் கிராம அலுவலர் வி.சேதுநாயகம்- ஹாட்லிக் கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதனிடம் கையளித்துள்ளார்.(17)

### தையல் பயிற்சிக் கண்காட்சி

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், மருதங்கணேி கிராம சேவகர் பிரிவில் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற தையல் பயிற்சி வகுப்பின் கண்காட்சி - நாளை மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

2004 ஆம் ஆண்டிற்கான தையல் பயிற்சி வகுப்பு, உடுத்துறை கிராம சேவகர் பிரிவில் இந்த மாதம் தொடக்கம் தெரிவுசெய்யப்பட்ட 30 மாணவர்களுடன் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (17)

### ஆசிரியர்சேவை முன்பயிற்சி விழா

ஆசிரிய சேவை முன்பயிற்சி வகுப்பு கருத்தரங்கு ஒன்று - இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 35 ஆசிரியர்கள், ஆசிரிய சேவை முன்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த பயிற்சி வகுப்புக்கள் நாளை மறுதினம் முதல், பெப்ரவரி 8 ஆம் திகதி வரை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று, யாழ்.கல்வி வலைய முகாமைத்துவ மண்டபத்தில் இந்தமாதம் 30 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர் சேவை முன்பயிற்சியாளர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.




# மாறிவரும் உலகிற்கு ஏற்ற விதத்தில் கல்வி முறைகளும் மாற்றப்பட வேண்டும்

**எமது பாடசாலை - ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றில் கூடிய கவனமெடுக்கின்றன. மேலை நாடுகளில் அவற்றைப் பொருட்படுத்துவதை நாம் காணமுடியவில்லை எனக் கூறும் அதிபர்களுக்கான வாண்மை விருத்திச் செயற்திட்டத்திக்கீழ் ஐக்கிய இராச்சியம், பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்திற்குக் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்ட, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் இரஞ்சிதம் குட்டித்தம்பியுடன் ஒரு நேர்காணல்...**

*ஐக்கிய இராச்சியதிற்குக் கல்விச் சுற்றுலா ஒன்றினை நீங்கள் மேற்கொண்டீர்கள். இந்தச் சுற்றுலா யார்மூலம் ஒழுங்கமைக்கப்பட்டது? அதில் எத்தனை பேர் கலந்துகொண்டீர்கள்?*

இது உலக வங்கியின் நிதியுதவியுடன் இலங்கை மனிதவள அபிவிருத்தி, கல்வி பணபாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இலங்கையிலுள்ள தேசிய கல்லூரிகளிலிருந்தும் 1 ஏபி தரக்கல்லூரி கலிருந்தும் 34 அதிபர்களும், அமைச்சிலிருந்து ஒரு இணைப்பாளருமாக 35 பேர் கலந்துகொண்டோம்.

*நீங்கள் மேற்கொண்ட சுற்றலாவின் மூலமாகக் கல்விக்கொள்கையுடன் தொடர்பான நிர்வாக அனுபவம் எவ்வாறு இருந்தது?*

ஒவ்வொரு பாடசாலைகளும் தமது பாடசாலையின் கருமங்களைத் திட்டமிட்ட முறையில் நடாத்துகின்றமை மிகவும் சிறப்பாகத் காணப்பட்டது. பாடசாலையின் நிர்வாகம் தெளிவாக வரையறுக்கப்பட்டு, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளையும், ஆசிரியர்களுடைய கற்பித்தல் செயற்பாடுகளையும்விருத்தி செய்வதற்காகவே மேற்பார்வை உதவுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். நாம் நேரில் சென்று பார்வையிட்ட பாடசாலைகளில் பெற்ற அனுபவங்களைக் கொண்டே இதை நான் கூறுகின்றேன்.

*கல்வித் தரம் எத்தகைய அடிப்படையில் எமது நாட்டிற்கும் அந்த நாடுகளுக்கும் இடையில் மாறுபடுகின்றது.*

இரு நாடுகளுக்குமிடையேயுள்ள கல்வித் தரத்தை ஒப்பீடு செய்வது அவ்வளவு பொருத்தமாக அமையாது. முன்னர் நான் குறிப்பிட்டவாறு அது ஒரு விருத்தியடைந்த நாடுகளின் - பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் போதியளவு கற்றலுக்குரிய வளங்களுண்டு. பாடசாலைகளில் வரையறுக்கப்பட்ட மாணவர் தொகையே அனுமதிக்கப்படுகிறது. வகுப்பறைகளில் ஆசிரியர்களும், ஆசிரிய உதவியாளர்களும் கடமையாற்றுகின்றனர். பெற்றோரும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்தவர்களாயுள்ளனர். இங்கு இந்தச் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. இங்குள்ள வளங்களுடன் ஒப்பிடும்போது எமது கல்வித் தரம் குறைவானதென்றும் கூற முடியாது.

*அந்த நாட்டுக் கல்விமுறையை எமது நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள், நடைமுறைகள் இருக்கின்றனவா?*

அங்கு கலைத்திட்டத்தில் தொழில்நுட்பப் பாடங்களும் முக்கிய இடங்ளை வகிக்கின்றது. நவீன கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் வகுப்பறையில் சாதாரணமாகவே பயன்படுத்தப்படுகின்றன. தொழில் வழிகாட்டல் சேவை ஆண்டு 9 இல் ஆரம்பிக்கப்படுகின்றது. தகவல் தொழில்நுட்பமும் ஆண்டு 7 இலேயே ஆரம்பிக்கப்படுகின்றது. இவை அந்த நாட்டிற்குப் பொருத்தமானதாக இருக்கலாம் எமது நாட்டின் பொருளாதார நிலைக்கும் கலாசாரத்திற்கும் ஏற்றவகையிலும் அதேவேளை வேகமாகமாறிவரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கும், ஏற்றவிதமாக இங்கும் கலைத் திட்டம் அமைக்கப்படுதல், கல்வித் தர விருத்திக்காக வள ஆளணியினர் முறையாகப் பயிற்றுவிக்கப்படுதல், அவற்றுக்கான உள்ளீடுகள் தரமாயிருத்தல் ஆகியனமூலம் இங்கும் கல்வித்தரத்தை உயர்த்தலாம்.

*எமது பாடசாலைக்கல்வி நிர்வாக முறைகளுக்கும், நீங்கள் சுற்றுலாவின்போது அறிந்த பாடசாலை நிர்வாக முறைகளுக்கும் என்ன வேறுபாடு காண்கின்றீர்கள்?*

இங்கு பாடசாலை நிர்வாகத்தில்அதிபர், பிரதிஅதிபர், பகுதித் தலைவர், பாட இணைப்பாளர், தர இணைப்பாளர் ஆகியோர் பங்கேற்று, நிர்வாகம் பன்முகப்படுத்தப் பட்டுள்ளது. அங்குநாம் விஜயம் செய்த பாடசாலைகளிலும் இவ்வாறான முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுகின்றன. எனினும், ஒரு ஆளுநர் சபையின் நிர்வாகத்தினூடாகவே பாடசாலைச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. உள்ளூர்க் கல்வி அதிகார சபையின் கொள்கை வகுத்தலின்படி பாடசாலை அனுமதிகள் வழங்கப்படும். தரம் 11 மாணவர், தரம் 12, 13 மாணவர்கள் பொதுப் பரீட்சைகளுக்கே தோற்றுகின்ற போதும், இங்குள்ளதுபோன்று மத்திய அமைச்சு, மாகாணக்கல்வி திணைக்களம், வலயக் கல்வி திணைக்களம், கோட்டக்கல்வி அலுவலகம் போன்ற முறைகள் அங்கு இல்லை.

எமது பாடசாலைகள் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றில் கூடிய கவனமெடுக்கின்றன. மேலைநாடுகளில் அவற்றைப் பொருட்படுத்துவதை நாம் காணமுடியவில்லை.

*ஒரு கல்லூரியின் அதிபர் என்றவகையில் சுற்றுலாவின்போது, நீங்கள் பெற்றுக் கொண்ட அறிவும், அனுபவமும், எங்கள் பகுதிலுள்ள பாடசாலை சமூகங்களுக்கு எந்த அளவில் பிரயோகிக்க கூடியது என நீங்கள் கருதுகின்றீர்கள்?*

அங்குள்ள பாடசாலைகளின் நிர்வாகச் செயற்பாடுகளையும், கற்றல், கற்பித்தலில் கையாளப்படும் நவீனமுறைகளையும் நாம் பின்பற்றவேண்டும் என்ற அவா எனக்கு ஏற்பட்டுள்ளபோதிலும், ஒரு விருத்தியடைந்த நாட்டிலுள்ள வளங்களையும், அவற்றின் பயன்பாட்டையும் எமது நாட்டில் அதிலும் குறிப்பாக சம வளப்பங்கீடற்ற எமது பாடசாலைகளில் எவ்வாறு பிரயோகிப்பது என்பது கேள்விக்குறியான விடயம். எனினும், நாம் பெற்ற அனுபவத்திலிருந்து எமக்குப் பொருத்தமானவற்றையாவது எமதுகல்லூரிகளில் பிரயோகிப்பதனூடாக தரமேம்பாட்டை ஏற்படுத்தலாம் என நினைக்கிறேன்.

*இந்தச் சுற்றுலாவின் போது நீங்கள் சென்ற இடங்களையும் செலவழித்த நாட்களையும் எங்களோடு சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்?*

எமக்கு ஒதுக்கப்பட்ட மூன்று வாரங்களில் பெரும்பாலனவை, பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தில் பல்வேறு பயனுள்ள தலைப்புகளில் விரிவுரைகள், கலந்துரையாடல்கள் போன்றவை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் உள்ளூர்க் கல்வி அதிகாரசபை அதிகாரிகளால் நடாத்தப்பட்டன.

இக்காலப்பகுதியில் அங்குள்ள 3 இடைநிலைப பாடசாலைகளுக்குச் சென்று, கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளையும் முகாமைத்துவ முறைகளையும் நேரில் அவதானித்தோம.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்த இடமாகிய ஸ்ரற்போட் (**Strat Ford**), ஒக்ஸ்போட் (**Oxford**) பல்கலைக்கழகம் ஆகியவற்றை ஒருநாள் சென்று பார்வையிட்டோம் பிறிதொருநாள் லண்டன் மாநகரின் பிரபல இடங்களான பக்கிங்ஹாம் மாளிகை , **Trafalgar Square**, வெஸ்ற்மினிஸ்ரர் அபே பாராளுமன்ற இல்லங்கள், லண்டன் **Eye, Tower Bridge** ஆகியவற்றைப் பார்வையிட்டோம். அத்துடன், பேரமிங்ஹாம் நகரின் பிரதானமையங்களுக்கும் நேரம் கிடைக்கும்போது செல்வோம். கிறிஸ்மஸ் காலத்தையொட்டி நகரின் மையப் பகுதிகள் வர்த்தக நிலையங்களெல்லாம் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இவ்வளவு காலமும் நாம் படித்தும், அறிந்தும், படங்களில் பார்த்தும் இருந்த பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டபோது ஏற்பட்ட அனுபவத்தை வார்த்தையில் வடிப்பது கடினம்.

**நேர்காணல்:- கா.பஞ்சரத்தினம்**


இரஞ்சிதம் குட்டித்தம்பி



## கழுத்து வலிக்கு சுய உதவி


- கடுமையான வலி ஏற்படும் சமயத்தில் படுத்து ஓய்வு எடுக்கவும். பாதிக்கப்பட் பகுதிக்கு வெந்நீர் அல்லது ஐஸ் ஒத்தடம் கொடுக்கவும்.
- மனதளவில் இறுக்கமின்றி அமைதியாக இருக்கவும்.
- நேரான கோணத்தில் அமரவும் குறிப்பாக அலுவலகத்தில் .மேற்பணி புரியும்போது, கணினிமுன் அமரும் போதும்....
- படிக்கும்போது படிக்கின்ற புத்தகத்தை உங்கள் நேர் எதிரில் வைத்துக்கொள்ளவும்.
- மேசையில் அமர்ந்து பணி ஆற்றும்போது, நெடுநேரம் தலை கவிழ்ந்த நிலையில் இருப்பதை தவிர்க்கவும்.
- ஒரே நிலையில் நெடுநேரம் கழுத்தை வைத்திருக்காமல், அடிக்கடி தலையை அசைக்கவும். இது தசைகள் இறுக்கம் அடைவதைத் தவிர்க்கின்றது.
- படுக்கும்போது, கழுத்துக்குக் கீழே ஒன்றுக்கு மேற்பட்ட தலையணைகள் அல்லது அதிக உயரமான தலையணை வைத்துப் படுப்பதை தவிர்க்கவும்.
- வயிறு தரையில் படும்படி குப்புறப்படுக்காதீர்கள். இந்த நிலை கழுத்துப்பகுதியை முறுக்கி விடுகின்றது.
- ஒரு குறிப்பிட்ட உயரத்தைப் பார்ப்பதில் தொடர்ச்சியாக நெடுநேரம் ஈடுபடாதீர்கள். அதேபோல், அதிக பாரம் தூக்குவதில் அதிக நேரம் ஈடுபடாமல் இருக்கவும்.
- நெடுநேரம் தொடர்ந்து வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்கவும். அப்படி ஓட்டுவதாயின் அடிக்கடி ஓய்வுக்காக வண்டியை நிறுத்தவும்.
- நாம் பழக்கத்தின் காரணமாகவே நம் கழுத்துக்களை தவறான முறைகளில் திருப்புகிறோம். இதனால், கழுத்துக்கு இடையூறே. நம் தசைகள் உறுதியானவையாக இல்லை என்றாலோ, நெகிழ்வுத் தன்மை குறைந்தவை என்றாலோ கழுத்துக்கு மேலும் தொந்தரவு வரும். கழுத்து உடற்பயிற்சி, கழுத்தின்மீது ஏற்படும் அழுத்தம், சமநிலை இன்மையைச் சீராக்கும். இயக்கத்தை அதிகரிக்கும். கழுத்தைப் பாதுகாக்கும் தசைகளை உறுதி பெறச்செய்யும்.

எனினும் கழுத்துப் பயிற்சியில் மிதமிஞ்சி விடக்கூடாது நிதானமாகவும், படிப்படியாகவும் பயிற்சி செய்யவும்.

## வீடு அழகாகக் காட்சியளிக்க

(சென்றவாரத் தொடர்ச்சி...)

பார்க்க சாதாரணமாகக் காட்சியளிக்



கும் அறைகள்கூட சீலிங் போட்டபின் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும்.

பெரும்பாலும் இந்த சீலிங்கை போடும் போது ஒருவித செயற்கை அட்டை கொண்டும் போடுவார்கள். இப்படி போடுவதை 'பானலிங்' என்று சொல்கிறார்கள்.

அழகிய வேலைப்பாடமைந்த இந்த பானல்ஸ்மூலம், சில மணி நேரங்களிலேயே ஒரு இடத்தின் அமைப்பை மாற்றிக்காட்ட முடியும். சுவர் வெள்ளையாக இருந்தால், அந்த அறைக்குப் பானலிங் சீலிங்கை வெள்ளை அல்லது பச்சை நிறத்தில் போடலாம்.

மர வேலைப்பாடுகள் போல் இளம் பிறவுண் நிறத்தில் இந்த சீலிங் பானல்ஸ் கிடைக்கின்றது. அறையின் உயரத்திற்கு ஏற்றபடி வடிவத்தைத் தேர்ந்தெடுத்து கொள்ளலாம்.

சிலரால் அதிக செலவுசெய்து இது போன்ற பானல்ஸ் சீலிங் போடமுடியாது. அப்படிப்பட்டவர்களுக்குத் தற்சமயம் புதிய மாதிரி ஒரு பானலிங்கூட இப்போது காணப்படுகின்றது. இது அலங்காரத்திற்கு மட்டும் பயன்படுத்துவதாகும். இது பார்க்க பிளாஸ்டிக் போன்று இருக்கும்.

உடனடியாகவே ஒட்டிவிடலாம். இது கலையம்சத்துடன் இருப்பதால் வரவேற்பறையில்கூட ஒட்டிக்கொள்ளலாம்.

இது போன்ற பிளாஸ்டிக் சீலிங்கள் நம்மிடம் இருக்கும் எந்த பொறியியலாளருடனும் ஒத்துப்போகும். அதிக செலவு செய்ய முடியாதவர்களுக்கு பிளாஸ்டிக் பானல்ஸ் ஒரு வரப்பிரசாதம்

நல்ல சுவர் அலங்காரம், தரை மேற்கூரை அனைத்தும் நன்கு அமைந்துவிட்டால் நமது வீட்டில் அழகான ஸ்டார் ஹோட்டல் அழகைக்கூட கொண்டு வரலாம்.

இவ்வாறு வீட்டை அழகுபடுத்துவதனால், வீடு அழகாக காடசியளிப்பது மட்டுமல்ல ஆனந்தமாக இருக்க வழிசெய்கின்றது. அழகாய் இருந்து ஆனந்தம் பெறுவோம்.

# அன்றைய பெண்களும் இன்றைய பெண்களும்

பெண்கள் என்று பொதுவாகக் கூறும்போது, மென்மையானவர்கள், அன்பை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்றுதான் அனைவரும் நினைப்பதுண்டு.

அன்பை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்று அர்த்தங்கொள்ளும்போது, எல்லாவற்றிலும் ஒரு ஒழுக்கத்தை, கட்டுப்பாட்டை உடையவர்கள் என்று கூறலாம். அதிலும் தமிழ்ப் பெண்களில் அத்தகைய குணாதிசயங்கள் கூடுதலாகக் காணப்பட்டதென்றால், அது மிகையாகாது என்பது



எனது ஊகம்.

அன்றைய பெண்களையும், இன்றைய பெண்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும் நாம்- அவர்களுடைய கல்வியறிவு, கலாசாரம், வீரம் ஆகியவைகளை எடுத்துப்பார்ப்பதே பொருத்தம். இலங்கையை பொறுத்தவரை 1820 களின் பின்னர்தான் பெண்கள் படிக்கத் தொடங்கினார்கள் என்று அறிகிறோம். அதிலும் யாழ்ப்பாணப் பெண்களை அன்றைய கால ஆண்கள் கல்விகற்க அனுமதிக்காத ஒரு நிலைமை இருந்தது என்று கூறலாம்.

ஆங்கிலேயர்கள் இலங்கை நாட்டின் ஆட்சியைப் பிடித்து யாழ்ப்பாணம் வருகை தந்து ஆண்டபோதுதான், எமது பெண்களும் கல்வி கற்பதை ஆரம்பித்தார்கள். அதன் பிறகும் இப்போதும் எமது பெண்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கிறது. அந்தக் கல்வி அறிவின் காரணமாக அதிலும் ஆங்கிலக்கல்வி அறிவின் காரணமாக அவர்களின் அறிவு சொல்லமுடியாதளவுக்கு முன்னேறி வந்தது உண்மை.

அதனால், ஆண்கள் வகித்துவந்த பெரும் உத்தியோகங்களைக்கூட பெண்கள் வகிக்கும்நிலை ஏற்பட்டது. முன்னொரு காலத்தில் அரபு நாடு ஒன்றில் "குலேபகாவலி" ஆட்சி இருந்ததுபோல இங்கிலாந்து, இந்தியா ஆகியநாடுகளின் ஆட்சியில் பெண்களே ஜனாதிபதியாக, பிரதமர்களாகப் பதவியேற்று ஆட்சி புரிந்திருக்கிறார்கள். இன்றும் அந்தநிலை இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலே காணப்படுகிறது.

அரசியலில் கல்வியறிவு படைத்து முன்னேறிய அவர்கள் கலாசாரத்திலும் அதாவது நடனம், இசை, நாடகம், விளையாட்டு ஆகிய துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு முத்திரை பதித்துள்ளார்கள். இன்றும் அப்படித்தான். உதாரணமாக - இலங்கையில் சுசந்திகா, இந்தியாவில் மல்லேஸ்வரி இன்னும் வெளிநாட்டைச் சேர்ந்த வில்லியம் வீனஸ் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இன்றைய பெண்கள் வீரத்திலும் தங்களைத் தயார் செய்து வருகிறார்கள். அன்றைய பெண்களுக்கு அந்தநிலை அமையாததற்கு வெவ்வேறு காரணங்கள் இருந்திருக்கலாம்.

ஆண்களின் அடக்குமுறை ஆதிக்கம், குடும்பப்பழு, அதாவது குழந்தைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பு எனப் பல இருந்தமையால், அவர்களால் பொது வாழ்வில் பங்குபற்ற முடியாதநிலை ஏற்பட்டிருக்கும். இன்று அப்படியல்ல வீட்டு வேலைகளைக் கவனிக்க இன்னொரு ஆள் (வேலையாள்) இருக்கும். அதனால் அவர்கள் பொதுச்சேவையிலும் ஈடுபடலாம், ஈடுபடுகிறார்கள்.

அத்தோடு இக்காலத்தில் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட கல்லூரிகள், பாடசாலைகள். பாடசாலை கல்லூரி மட்டத்திலேயே அவர்களுக்கான விளையாட்டு முறைகளும், வகைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுப் பயிற்சி நடைபெறும்.

அதனால், அவர்கள் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்குகிறார்கள். டெனிஸ் விளையாட்டில் வீனஸ் வில்லியம் போன்றவர்கள், இந்தியாவில் மல்லேஸ்வரி (பாரம்தூக் கும் போட்டியில்), இலங்கையில் சுசந்திகா (ஓட்டப்போட்டி) போன்றவர்களை எடுத்துச் சொல்லலாம்.

இந்த விளையாட்டு ரீதியாகப் பார்க்கும்போது, அன்றைய பெண்களைவிட, இன்றைய பெண்கள் சிறந்து விளங்குகிறார்கள் என்பது உண்மை...

வீரத்தை எடுத்துக் கொண்டால், இன்றைய பெண்கள் அன்றைய பெண்களைவிட மிகச் சிறந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதே உண்மை.

முறத்தை (சுளகு) எடுத்து அன்றையகாலச் சங்க இலக்கியப் பெண்கள் யானையை, சிங்கத்தை துரத்திய கதை படித்திருக்கிறோம். அங்கும் வீரம்தான் முளைவிடுகிறது. அதேபோல் அன்று ஜான்சிராணி போன்ற ஒருசிலர் இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்று கூடுதலான பெண்கள் வீரம் செறிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

அதிலும் இன்றைய படைத்தரப்பிலும், பொலிஸ் தரப்பிலும் பெண்கள் அதிக அளவுக்கு ஈடுபட்டு வருகிறார்கள். இது சிங்கள இராணுவம், பொலிஸ் ஆகிய பிரிவுகளில் அதேபோல் தமிழ்ப் பெண்களை எடுத்துப் பார்ப்போமானால் புலிகள் இயக்கத்தில் அதிகளவு பெண்களை நாம் காணலாம். மிகச்சிறப்பாக வீரச்செயல்கள், போர்கள் செய்யும் வல்லமை படைத்துள்ளார்கள். எதிரிகளில் ஆணாக இருந்தாலும்கூட அவர்களை மடக்கிப்பிடித்து வெல்லக் கூடியதான வீரம் செறிந்தவர்களாக அவர்கள் விளங்குகிறார்கள்.

அன்றைய காலத்துப் பெண்களை அதிலும் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்களை எடுத்துப் பார்ப்போமானால், அவர்கள் ஆங்கிலேயர்கள் எம்மை ஆளத்தொடங்கியதற்கு முனபு- அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற குணங்களுக்கு கட்டுப்பட்ட பெண்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாண நிலையை பொறுத்தவரையில் ஒருபெண் - யாராவது ஆண்கள் வீட்டுக்கு வந்து விட்டால் அவரை எட்டியும் பார்க்கமாட்டார்கள். யாழ்ப்பாண வீட்டுவேலிகள் உயரமாக கட்டப்பட்டு அன்று இருந்தமைக்கு ஒரு காரணம் அதுவாகவும் இருந்திருக்கிறது.

ஒரு குமர்ப் பெண் வேலியால் எட்டிக் கூட தெருவால் போகிறவர்களை, வருகிறவர்களை பார்க்கமுடியாது. அந்த அளவுக்கு அவர்களுக்கான கட்டுப்பாடு இருந்தது. அந்தக்காலத்தில் அவரைத்தான் நீ கட்ட வேண்டும் பிள்ளை என்றால், அது அப்படியே நடந்த காலம்.

எனது பாட்டா செல்லுவார் தனது நண்பர் ஒருவனுக்கு திருமணம்பேசி முடித்து, திருமண நாளும் வந்தது, பெண்ணைக் கொண்டுபோய் மணப்பந்தலில் அமர்த்திவிட்டார்கள். அமர்த்திய பின்புதான் மாப்பிள்ளைக்குத் தெரியவந்தது இது தனக்குப் பேசிய பெண்ணல்ல என்று வேறு ஒருத்தி. ஒரு கண் பார்வையில்லாதவள். அத்தோடு அழகும் இல்லாத ஒரு பெண். ஆனால், மாப்பிள்ளை மிகவும் அழகானவன். இந்த நிலையில் மாப்பிள்ளை எழுப்பி வீட்டுப் படலையை திறந்து கொண்டு ஓடிவிட்டார். ஓடியவரைக் கலைத்துப்பிடித்து கொண்டு வந்து மறுபடியும் அமரவைத்து அப்பெண்ணுக்கே அந்த மாப்பிள்யையைக் கொண்டு தாலிகட்டச்செய்தார்கள்.

இந்தக் காலத்தில் அப்படிக் கட்டுப்பாடு நிச்சயம் நடக்காது. இக்காலப் பெண்கள் தாங்கள் விரும்பிய ஒருவனையே (கூடுதலாக) மணம் செய்கிறார்கள். மணம் செய்வதற்கு முன் இளைஞர்களோடு நன்றாகப் பழகுகிறார்கள். கட்டுப்பாடுகளில் இருந்து தங்களைத் தாங்களே விடுவித்து வாழக்கூடிய நிலைக்கு இன்றைய காலப் பெண்கள் எடுத்துக்



காட்டு. ஒரு சிலரை விதிவிலக்காக எடுத்துக் கொள்ளலாமே தவிர, எல்லோரையும் அல்ல. அதற்கு காரணம் அவர்களுடைய வீரம்.

ஆகவே, இன்றைய பெண்கள் அன்றைய பெண்களைவிட வீரத்திலும் சிறந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஒழுக்கம், பண்பாடு என்று வரும்போது ஒரு சிக்கலை நாம் காணலாம்.

இன்றைய சினிமா உலகத்தை எடுத்துப் பார்ப்போமானால், அதிலும் தென்இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தமிழ் சினிமா எமது பெண்களின் பண்பாட்டை ஒழுக்கத்தை கெடுத்துவிடுமோ என்று ஐயப்பட வேண்டியநிலை எமக்கு ஏற்படுகிறது. அந்தத் திரைப்படங்களிலே வருகின்ற அருவருப்பான, அசிங்கமான எமது தமிழ்க்கலாசாரத்துக்கு ஒத்துவராத காதல் காட்சிகளால் எமது இளம் பெண்களின் கலாசார பண்பாட்டு ஒழுக்கமுறை கெட்டுவிடுமோ என்று பல தாய்மார்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

சினிமா, ரீ.வி போன்ற ஊடகங்களில் இப்படியான படக்காட்சி நிகழ்வுகள் காட்டப்படும்போது, தாய் தந்தையர் தத்தமது இளம் பிள்ளைகளோடு ஒன்றாக இருந்து அப்படங்களைப் பார்க்கமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.

என்றைக்கு அப்படியான காட்சிகளுக்கு கததரிக்கோல் போடுகிறார்களோ, அன்றைக்குத்தான் எமது இளம் சந்ததி கலாசார பண்பாட்டு ஒழுக்கத்தில் சிறந்து நிற்பார்கள் என்று எண்ணத்தோன்றுகிறது.

அந்தப் படங்களின் இறக்குமதியை அடியோடு நிறுத்தினாலும் நல்லதென்றேபடுகிறது. திரைப்படங்கள் கட்டாயம் தேவை என்றால் அவைகள் அறிவு சம்பந்தமான, விஞ்ஞான ஆராய்ச்சி சம்பந்தமான, சிறுவர்களின் கல்வி வளர்ச்சி சம்பந்தமான அல்லது விளையாட்டுத்துறை, தொழில்துறை சம்பந்தமான திரைப்படங்களாக இருப்பதையே பலரும் விரும்புவார்.

இது எமது அரசாங்கத்தை கலாசார அலுவல்கள் துறை சார்ந்தோரைப் பொறுத்தது.

இறுதியாக என்னால் சொல்லக் கூடியது கல்வி, அறிவு, வீரம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிவரும் எமது பெண்கள் அன்றைய பெண்களை விடச் சிறந்தவர்கள் என்பது உண்மையாயினும் - ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றிலும் அவர்கள் சிறந்துவிளங்க வேண்டும்.

அப்படிச் சிறந்து விளங்குபவர்களாக இருந்தால் நிச்சயமாக அன்றைய பெண்களைவிட இன்றைய பெண்கள் எல்லாவற்றிலும் சிறந்தவர்களே.

**செ. மகேஸ்வரி**

# பீற்றூட் சாப்பிட்டுப் பாருங்களேன்

அழகிய நிறமும் நிறைய சத்துக்களும் கொண்டது பீற்றூட் - இதனுடைய நிறத்திற்காகவே இதனை அனைவரும் விரும்பி உண்ணுகின்றனர். பீற்றூட்டில் உள்ள



காபோவைதரேட் சர்க்கரைத் துகள்களாக இருப்பதால் இது விரைவில் ஜீரணமாகி நம் இரத்தத்துடன் கலந்துவிடுகிறது.

பீற்றூட் 100 கிராமை எடுத்துக் கொண்டால் தண்ணீர் 87.7 வீதமும், கொழுப்பு 0.1 வீதமும், தாது உப்புக்கள் 0.8 வீதமும், நார்ச்சத்து 0.9 வீதமும், காபோவைதரேற்று 8.8 வீதமும் உள்ளது. இதைவிட, மற்றும் கல்சியம் 18 மில்லி கிராமும், பொஸ்பரஸ் 55 மில்லி கிராமும், இரும்பு 1.0 மில்லி கிராமும், விற்றமின் C 10 மில்லிகிராமும் ஏனைய விற்றமின் **B** மற்றும் **B1,B12,B6** ஆகியவற்றுடன் சோடியம், பொட்டாசியம், அயடின் போனற சத்துக்களும் பீற்றூட்டில் உள்ளன.

சிறுநீரகம், பித்தப்பை ஆகியவற்றில் சேர்த்துள்ள தேவையற்ற அழுக்குகளை நீக்குவதுடன், பீற்றூட் ஒரு சிறந்த சுத்திகரிப்பானாகவும் செயற்படுகின்றது. பீற்றூட்டில் உள்ள இரும்புச்சத்து நம் உடலில் புதியதாக இரத்த அணுக்கள் உருவாக துணைபுரிகிறது. பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள், பேரீச்சம்பழம், அத்திப்பழம் ஆகியவற்றை அதிகளவு உண்டும் இரத்தத்தின் அளவு அதிகரிக்காமல் இருக்கும் பட்சத்தில் பீற்றூட் வாரத்திற்கு நான்கு நாட்கள் உண்டால் நல்லபலன் கிடைக்கும். சமையல் செய்து சாப்பிடுவதுடன் பச்சையாகவும் சாப்பிடலாம்.

கல்லீரல் கோளாறுகளுக்கும் பீற்றூட் ஒரு சிறந்த மருந்து. பித்தம் அதிகமாகி, அடிக்கடி பித்தவாந்தி எடுப்பவர்களுக்கு சிறந்தது பீற்றூட் ஆகும். பீற்றூட் இலைகளை மற்றைய கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட்டால் அல்சர், மஞ்சட்காமாலை போன்ற நோய்கள் குணமாகும்.

பலமாதங்களாக மலச்சிக்கலினால் துன்பப்படுபவர்களும் பீற்றூட் சாறை தண்ணீருடன் கலந்து (அரை கப்) இரவு படுக்கைக்கு முன் அருந்தவேண்டும். பிற்றூட்டை உணவில் அடிக்கடி சேர்ந்துக்கொண்டால், கிட்னியில் கற்கள் உருவாகுவதைத் தடுக்கலாம்.

தோலில் ஏற்படும் அரிப்பு, எரிச்சல் போன்றவற்றுக்கு, இரண்டு பங்கு பீற்றூட் சாற்றுடன் ஒரு பங்கு தண்ணீரைக் கலந்து தடவினால் பிரச்சினையிலிருந்து விடுபடலாம்.

தலையில் ஏற்படும் வெள்ளை நிறப் பொடுகு அகற்றுவதற்கு பொடுகு காணப்படும் இடத்தில் பீற்றூட் சாறை பூசியபின் மஜாஜ் செய்து இரண்டு மணி நேரம் கழித்து சீயாக்காய் பவுடர் கொண்டு தலை முழுகினால், நாளடைவில் பொடுகுகள் இல்லாமல் போவதுடன், உங்கள் தலை முடியும் பளபளவென்று காணப்படும் தலையில் முடி வளர்வதற்கு இது உதவும்.

புற்று நோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள் - பீற்றூட் சாற்றை தினமும் 1 கப் பருகி வந்தால் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். ஆரம்ப நிலையிலுள்ள புற்றுநோயை குணமாக்கும் வல்லமை படைத்தது.

# இந்த வார பலன்கள்

## 30.01.2004 - 06.02.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | சந்.செவ் ராகு | | சனி |
| சுக் யுரே | 30 மா 6.54 இட-சந்<br>02 கா 7.50 மிது-சந்<br>03 கா 7.13 மக-புத | | |
| சூ. நெப் | 03 மா 7.12 மீன-சுக்<br>04 மா 7.17 கட-சந் | | குரு |
| புத | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் வருவாய் ஓரளவு நன்று. நினைத்த கருமங்கள் தாமதத்தின் பின் கைகூடும். குடும்பத்தில் கருததது வேற்றுமைகள் தோன்றும். இனபந்துக்களின் வருகை, உதவி என்பன உண்டு. எனினும், செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும். திருமணப்பேச்சுமுதலியன இழுபாட்டிலேயே காலம்போகும். கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு. அவதானமாக இருக்கவும் உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றங்கள் கிடையாது. புதிதாக உத்தியோகத்தை எதிர்பார்த்தவர்களுக்கு கால தாமதம் எடுக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே இருக்கும். கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு. அவதானமாக இருக்கவும். உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றங்கள் கிடையாது. புதிதாக உத்தியோகத்தை எதிர்பார்த்தவர்களுக்கு காலதாமதம் எடுக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே இருக்கும்.

முதலீடுகளை விலைப் படுத்துவது கஷ்டமாகும். மாணவர்களுக்கு கல்வியில் கூடிய முயற்சி தேவைப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் சுமாராக அமையும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு குடும்பத்தில் நிம்மதிக்குறைவும், அலைச்சலும் காட்டும். கணவன் - மனைவியிடையே வாக்குவாதங்கள் தோன்றலாம். புத்திரர்கள், பெற்றோரின் சொற்கேளாது தம்மிஷ்டப்படி நடப்பதால், கஷ்டங்கள் ஏற்படும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போவதால், தமது வருமானத்தைக் கொண்டு சமாளிக்கமுடியாமல் இருப்பர்.

கொடுக்கல், வாங்கல்கள் பல கஷ்டங்களைத் தரும். குடும்பப் பெண்கள் மனவிரக்தியுடன் காணப்படுவர். எந்தக் கருமங்களையும் நினைத்ததுபோல் ஆற்றமுடியாமலிருக்கும். உத்தியோகத்திலுள்ளவர்கள் தமது பணிகளை உரியநேரத்தில் நிறைவேற்ற முடியாமல் தவிப்பர்.

அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும். திருமணப்பேச்சுக்கள் குழப்ப நிலையில் இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையில் நடப்பதால், இலாபத்துக்குப் பதில் நஷ்டமே காட்டும். அரச உதவிகளும்கிடையாது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் குறைந்து காணப்படுவர். பிறநடவடிக்கைகளில் காலத்தைக் கழிப்பர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இந்தவாரம் தொழில் முயற்சிகள் நன்றாக அமையும். குடும்பத்தில் அமைதியும், சந்தோஷமும் காணப்படும். உறவினர்களின் வரவு அதிகமாகும். பலருக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கலாம். குடும்பப் பெண்கள் மனநிறைவுடன் காணப்படுவர். பணவரவு திருப்தியாக இருந்தாலும், செலவுகள் கூடுதலாகவே காட்டும். திருமணப்பேச்சுக்கள் சற்றுக் காலதாமதத்தின் மேல் அமையும். வெளிநாட்டுப் பிரயாணம் முதலியவற்றில் தீர்க்கமான முடிவு கிடையாது. புதிதாக உத்தியோகத்தை விரும்புபவர்களுக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்கும். உத்தியோகத்தை வகிப்பவர்களுக்கு ஆர்வமும், சிரத்யையும் உண்டா கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடடும். வர்த்தகர்கள் வியாபாரத்தைத் திறம்படச் செய்து, நற்பலன் காண்பர். ஏற்றுமதி, இறக்குமதி என்பன நற்பலன் தரும். மாணவர்கள் ஊக்கமுடையவர்களாக இருப்பர்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம)*



கடகராசியினருக்கு நன்மை, தீமைகலந்த பலன்களே காட்டும். குடும்பத்தவர்களுக்கு அலைச்சலும், பிரயாசையும் கூடுதலாகவே இருக்கும். பணவருவாய் ஓரளவு இருப்பினும், செலவுகள் கட்டுப்படுத்த முடியாமலிருக்கும். போட்டி, பொறாமை போன்ற மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். தேகாரோக்கியம் குன்றுவதால், வைத்தியச் செலவுகளும் ஏற்படலாகும். குடும்பப் பெண்களுக்குப் பொறுப்புகள் அதிகமாகும். சாதுரியமாகச் செயற்பட வேண்டும். திருமணம் தாமதத்தின்மேல் கைகூடும். உத்தியோகத்தர்கள் மனக்குழப்பம் காரணமாக தொழிலில் போதிய கவனம் செலுத்த முடியாமலிருக்கும். மேலதிகாரிகளின் வன்சொற்களுக்கு ஆளாகநேரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே இருக்கும். வங்கி நிலையைச் சமாளிப்பது கஷ்டம். மாணவர்கள் ஊக்கம் குறைந்து காணப்படுவர். விளையாட்டில் ஆர்வம் இருக்கும்.

### சிங்கம்

*(மகம, பூரம், உத்தராடம் 1 ஆம் கால்)*




இவர்களுக்கு தொழிலில் பிரயாசையும், அலைச்சலும் காணப்படுவர். குடும்பத்தில் அமைதிக்குறைவால் அடிக்கடி சச்சரவுகள் காணும். பொருளாதார மேம்பாட்டுக்கு கடின உழைப்பு தேவைப்படலாகும். குடும்பப் பெண்கள் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருப்பர். வெளியூரிலிருந்து சுபசெய்தி கிடைக்கும். தொழில் செய்யும் இடங்களில் வீண் தொல்லைகள் ஏற்படலாம். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடையாது. வியாபாரிகளுக்கு வியாபாரம் சுமாராகவே இருக்கும். தொழிலில் போட்டி, பொறாமை ஏற்படும்.

புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்குக் கல்வியில் கூடிய ஆர்வம் தேவை. தொழிற்கல்வி பயில்வோர் நன்மையடைவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னி ராசிக்காரருக்கு இவ்வாரம் ஓரளவு நன்மையான பலன்கள் ஏற்படலாகும். தொழில்கள் நன்றாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் - மனைவியிடையே அந்நயோன்ய உறவு அதிகரிக்கும். பிள்ளைகள், நண்பர்கள் உதவுவார்கள். சிலருக்கு உல்லாசப் பிரயாணங்கள் கைகூடும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியாகத் திகழ்வார்கள். வேண்டிய பொருட்களை வாங்கிச் சேர்பபதில் ஆர்வம் மிகும். திருமணப் பேச்சுக்கள் நன்மையான பலன்களைத் தரும். புதுக்குடித்தனம் சிறப்பாக அமையும். உத்தியோகத்தர்களுக்கு வசதியான இடமாற்றங்களும், சிறப்புமுண்டு. அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவர். வர்த்தகர்கள் வியாபாரத்தைப் பெருக்கி, புது யுக்திகளைக் கையாண்டு தொழில் செய்வதால், பணம் சேரும். மாணவர்களுக்குப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியாக அமையும்.

### துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு இவ்வாரம் நன்மையான பலன்கள் கூடுதலாகக் கிடைக்கும். தொழில் சிறப்பும், வருவாய் மிகுதியும் உண்டு. குடும்பத்தில் குதூகலமும், மகிழ்ச்சியும் நிலவும். பிள்ளைகள், உறவினர் வெளிநாட்டிலிருந்து வருகை தருவார்கள். தொழில் முயற்சியில் அதிக அக்கறையும், ஊக்கமும் காணப்படும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் தோற்றமளிப்பர். ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஈடுபாடு காட்டுவார்கள். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு மணநிகழ்வுகள் கைகூடும். உத்தியோகத்தினர் உற்சாகத்துடன் பணியாற்றுவர். அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். வசதியான இடமாற்றங்களும் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் நன்மையும், நிறைந்த இலாபமும் கிடைக்கும். புதிய முதலீடுகளைச் செய்யலாம். மாணவர்களுக்குப் பரீட்சை சிறப்பான பலனைத் தரும். ஆசிரியர், பெற்றோர் பாராட்டுவர். சிலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கலாம்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



இவர்களுக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் நடப்பதால், நற்பலன்கள் குறைவாகவே இருக்கும். எந்தக் கருமத்தை ஆரம்பித்தாலும், அதில் தாமதமும், இழுபறியும் காட்டும். உறவினர்களிடையே ஒற்றுமைக் குறைவு தென்படும். பணவரவு ஓரளவு இருந்தாலும், செலவுக்குப் போதாமலிருக்கும். அயலவர்களுடன் பகைமையுணர்வு காட்டும். பெண்கள் மனநிம்மதியின்றிக் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். தேகாரோக்கியக் குறைவும் ஏற்படலாகும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு தொழில், பொறுப்பு, வேலைப்பளு என்பன அதிகமாகும். நிதானத்துடனும், அக்கறையுடனும் நடந்துகொண்டால் பிரச்சினைகளைச் சமாளிக்கலாம். வர்த்தகர்களுக்குத் தமது முதலீடுகளை விற்பனை செய்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படும். வருவாய் குறைவாகவே இருக்கும். போட்டிகளும் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர். தேகநலன் கல்வியைத் தொடர விடாது

### தனுசு

*(மகம், பூராடம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



இந்த ராசிக்காரருக்கு பல நற்பலன்கள் காத்திருக்கின்றன. குரு ஜென்மராசியை நோக்குவதால், கஷ்டங்கள் குறையும். குடும்பநிலை சுமுகமாக இருக்கும். சிரமத்துக்கேற்ப வருவாய் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் தென்படும். பொருளாதாரநிலை சிறப்படையும். உறவினர்கள் அன்புடன் பழகுவார்கள். பிள்ளைகளால் வருவாய் கிட்டும். குடும்பப்பெண்கள் மனநிறைவுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்களில் தாமதம் ஏற்பட்டாலும், விரைவில் நல்ல முடிவு கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் ஆர்வம் உண்டாகும். பதவியுயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கலாம். தொழில் சம்பந்தமான பிரயாணங்களும் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு நல்ல விற்பனை நடைபெற்று பணம் சேரும். மாணவர்களிடையே ஒற்றுமையும், சித்தியும் உண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசிக்காரருக்கு இந்தவாரம் கஷ்ட பலன்கள் கூடுதலாக இருக்கும். குடும்பச் சூழ்நிலையில் அமைதியின்மை காணப்படும். கருத்துவேறுபாடுகளும் ஏற்படும். செலவுகளும் கட்டுப்பாட்டை மீறிக்கொண்டு செல்லும். உறவினர்களிடையே பொறாமை மனப்பான்மை காட்டும். குடும்பப் பெண்கள் தமது தேவைக ளைப் பூர்த்திசெயய்யமுடியாமல் தவிப்பர். திருமணம் நிறைவேறுவதில் தாமதம் காணும். கடன்தொல்லைகளும் தலைதூக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழுவும், வீண் பிரயாசைகளும் காட்டும். அதிகாரிகளைத் திருப்திப்படுத்துவது கஷ்டமாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வாடிக்கையாளர்களின் வரவு குறைவாக இருக்கும். அரசவரிகளும் தொல்லைதரும். மாணவர்கள் கல்வியில் நாட்டம் குறைந்து காணப்படுவர். தேவையில்லாத விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



இவ்ராசியினருக்கு இவ்வாரம் சிறப்பான பலன்கள் நடக்கும். தொழில்வளம் நன்றாக அமையும். போதிய வருவாய் கிட்டும். நண்பர்கள், உறவினர்கள்மூலம் உதவி ஒத்தாசை கிடைக்கும். சிலருக்கு அந்நிய நாட்டுப் பொருள் வரவு உண்டு. பெண்கள் மனப்பூரிப்புடன் காணப்படுவர். தேகாரோக்கியம் குடும்ப சுகம் நன்றாக அமையும். சுபகாரிய முயற்சிகள் வெற்றியளிக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்பு ஏற்படும். நண்பர்கள் உதவிபுரிவார்கள். உத்தியோகத்திலுள்ளோர் அந்தஸ்து உயரும். இடமாற்றங்களும், ஊதிய உயர்வும் கிடைக்கும். தொழிலில் அதிக அக்கறை காட்டுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்கு அமையும். இலாபம் அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். மாணவர்கள் கல்வியிலும், போட்டிகளிலும் வெற்றிபெறுவர். ஆசிரியர்களின் பாராட்டுக் கிடைக்கும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்வர்களுக்கு இந்தவாரம் பாதகமான பலன்களே நடக்கும். பிரயாசைப்பட்டுத் தொழில் செய்தாலும், வருவாய் குறைவாகவே இருக்கும். புத்திரர்களால் உதவிக்குப் பதிலாக கஷ்டங்களே கிட்டும். குடும்பத்தில் நிம்மதி குறைந்து காணப்படும். உடல்நிலை தளர்ச்சியடைந்து மருத்துவ உதவி தேவைப்படும். பெண்கள் மத்தியில் மன உற்சாகம் குறைவடையும். வாகனம் செலுத்துவோர் விபத்துக்கள் பற்றி அவதானமாக இருக்கவும். உத்தியோகத்தர்கள் மனவிரக்தியாலும், கவனக்குறைவாலும் தொழிலைச் செவ்வனே செய்ய முடியாமலிருக்கும். அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகநேரும். வியாபாரத்துறையினர் கொடுக்கல், வாங்கல்களில் அவதானமாக இருக்கவேண்டும்.

புதிய முதலீடுகளைத் தள்ளிப்போடுதல் நன்று. மாணவர்களுக்கு கல்வியில் மறதி, அசதி போன்றவற்றால் முன்னேற்றம் தடைப்படும். கலைத்துறையினர் முன்னேற்றமடைவர். ◆

---

**செய்திக் கட்டுரை** - கனகரவி -

# இளைஞர்களே நல்ல பாதையில் நடவுங்கள்... எனும் பத்திகளை எழுதத் தூண்டாதீர்கள்...

*(நேற்றைய தொடர்ச்சி....)*

உங்களை வளர்த்துக்கொள்ள வவுனியா மாவட்டத்தில் ஏராளமான வளம் இருக்கின்றது. இந்த மண்ணில் நல்ல பண்ணைகளை உருவாக்கலாம், கைத்தொழிற்சாலைகளை நடாத்தலாம், அவை பற்றித் தேடுங்கள். நீங்களும் பயனடைந்து, எமது பிரதேசத்தையும் வளப்படுத்துங்கள். இவைபற்றிக் கண்ணைத் திறநது பாருங்கள். சில விரல்விட்டு எண்ணக்கூடிய இளைஞர்கள் - இது போன்றவற்றில் கடும் முயற்சி எடுத்து செயலாற்றி வருவதைக் காணமுடிகின்றது. அவர்கள் இன்னும் முன்னேற வேண்டும். பலருக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டவேண்டும்.

பாடசாலைக் கல்வி - இன்றைய போக்கில் தொழிலுக்கான கல்வி என்பதனைக் கூடியபங்கு கொண்டுள்ளதென்பது உண்மை. இதனுடன், ஆய்வுடனான கல்விக்குப் பார்வை திரும்ப வேண்டுமென்றால், பாடசாலை நூல்நிலையங்கள், பொது நூல்நிலையங்களை நாடுங்கள். ஏராளமான பணச் செலவில் கட்டப்பட்டுள்ள இவற்றினைப் பயன்படுத்துங்கள். நிறைவான வாழ்விற்கு நிறையப் படியுங்கள்.

இந்த மண்ணில் விடுதலைக்கான போர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இன்னும் முடியவில்லை. தமிழீழம் கிடைக்கவில்லை. இனம் பட்ட துன்பம் வரலாற்று வடுவாக, இனனும் நோவெழுப்பியபடியே உள்ளது.

அந்தப் பக்கங்களைப் புரட்டிப் பாருங்கள். உயிர்களும், அவயவங்களும், சொத்துக்களுமென கொடுக்கப்பட்ட விலைகள் மதிப்பிடமுடியாதவை. எமது இனத்தையே நசுக்குவதற்காகத் திட்டமிடுபவை. என்ன? எவ்வாறானவை என்பன பற்றிப் பல ஊடகங்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் பற்றிச் சிந்தனை செய்யுங்கள். நாம் இந்த மண்ணுக்கு என்ன செயதோம் என்று ஒவ்வொரு வரும் யோசியுங்கள்.

இளம் சமூகமே! நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் எழுதுவதற்கே கூசுகின்றது. வீதிகளில் கட்டாக்காலிகள்போல, அலைந்து திரிந்து - தனக்கும், சமூகத்திற்கும் உதவாமல் நடப்பது ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, மேலை நாட்டவர் கண்டுபிடித்த வீடியோப்படப் பிடிப்புக் கருவியை வைத்து படப்பிடிப்புக்களை செய்தீர்களாம். உங்கள் சேவையோ சேவை.

அவலங்களை உருவாக்காதீர்கள். விதைத்ததே அறுவடையாகும். உங்கள் செயல் வட்டம் சுற்றி உங்களையே வந்தடையும். நீங்கள் தெரியாமல் செய்கிறோம் என்று நினைப்பது- பூனை கண்ணைமூடி பால்குடிப்பது போன்றதாகும். உங்கள் தொல்லை அதிகரிப்பதை அவதானிக்கவும் பலர் உள்ளனர். நீதிக்கு முன் நீங்கள் நிறுத்தப்படும்போது, அதற்கான அறுவடை உங்களைச் சேரும்.

வவுனியாவில், சில இடங்கள் இளைஞர்கள் கூடும் இடங்களாக உள்ளன. அவற்றையும் நிச்சயம் சுட்டிக்காட்ட வேண்டும். குருமன்காட்டுச்சந்தி, பூந்தோட்டம் சந்தி, பொதுப் பூங்காவிற்கு முன்பாக, காமினி மகா வித்தியாலய மைதானத்திற்கு முன்பாக, பண்டாரிகுளம் பகுதியில் பல இடங்களில், குருமன்காடு கோவில் வீதி, பேரூந்து தரிப்பிடம், வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்கா என ஏராளமான இடங்களில்....

மீண்டும் கூற விரும்புவது நீங்கள் செய்வது வேறுயாருக்கும் தெரியாதவொரு காரியமென எண்ணிவிடாதீர்கள்.

**சட்டத்தையும், ஒழுங்கையும், பாதுகாக்கக் கடமை புரிவோரே..., பெற்றோரே..., இளம் சமூகத்தைத் திருத்துங்கள். இளைஞர்களே நல்ல பாதையில் நடவுங்கள். வாழ்வை வெறறி கொள்ளுங்கள்... வீண் அவலங்களைத் தவிருங்கள். இதுபோன்ற பத்திகளை எழுதத் தூண்டாதீர்கள்... நன்றி செலுத்துங்கள் இந்த மண்ணிற்கு... உயர்வடைவீர்கள்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாசற்றார்க்கு*
*இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து.* திருக்குறள்

# நமது நோக்கு

## தேசிய பாதுகாப்பும் இனவாத கட்சிகளின் கூட்டணியும்

அண்மைக்காலங்களில் அதாவது போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, சமாதானப்பேச்சுகள் ஒரு முக்கியமான திருப்புமுனையை எட்டும்வரை பேணப்படடு வந்த அமைதிநிலைக்கு நெருக்கடியையும், குழப்பத்தையும் எற்படுத்தும் வகையில், சாமாதன நடவடிக்கைகளை ஆரம்பம் முதலே அதிருப்தியுடன் நோக்கி, அது குறித்து அர்த்தமற்ற சந்தேகங்களை எழுப்பிவந்த ஜனாதிபதியும், அவர் தலைமையிலானதும், தற்போது சிதையுண்டு போய்க்கொண்டிருப்பதுமான பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற சிங்கள இனவாதக் கட்சிகளும், திடீரென நாட்டின் சட்டம், ஒழுங்கு கெட்டுப்போய்விட்டதாகவும், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எற்பட்டுவிட்டதாகவும், பெருமெடுப்பில் 'புலம்பல் பிரசாரத்தை' மேற்கொள்ளத்தொடங்கியதும், அதனையடுத்து இந்தப் புலம்பல்களையே காரணம் காட்டி, ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரவலுவைப் பயன்படுத்திப் பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுகளை ஓர் அதிரடி நடவடிக்கைமூலம் அபகரித்துக்கொண்டமையும் அனைவரும் அறிந்தவிடயமே.

போர் நடவடிக்கைகள் முனைப்புக் கொண்டிருந்த காலத்தில்கூட, நாட்டின் பாதுகாப்புக்கு இந்த அளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக எவரும் கருத்துக்கூறிக் குழப்பியது கிடையாது. அந்த அளவுக்கு இப்போது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் - ஒரு திட்டமிட்ட வகையிலான அரசியல் சதியொன்றின் முன்னோடி நடவடிக்கையாகவே அமைந்திருந்ததெனலாம்.

இங்கு அரசியல் சதியெனக் குறிப்பிடுவது - சமாதானத்திற்கெதிரான நடவடிக்கைகளை இலக்காகக்கொண்ட திட்டமிடல்களையே குறிக்கும்.

சமாதானமுயற்சிகள் ஒரு நல்நோக்கத்தை இலக்காகக் கொண்டவை என்பதில் சர்வதேச சமூகமே உறுதியானநிலைப்பாட்டினை எடுத்துள்ள இன்றையநிலையில், இந்த முயற்சிகள் யாவும் சர்வதேசநாடுகளின் அனுசரணை மற்றும் ஆலோசனைகளுடனும், பரந்தளவிலான கண்காணிப்புடனும் மேற்கொள்ளப்பட்டு வருகையில், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது என்று பெருத்த ஒப்பாரியொன்றினைச் சந்திரிகா தலைமையிலான எதிர்க்கட்சிகள் எழுப்பிவருவது எதற்காக என்ற கேள்வி எழுவதும் தவிர்க்கமுடியாததாகவே உள்ளது.

வெறுமனே மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி, தமது சுய அரசியல் இலாபங்களை அடைவதற்குரிய மார்க்கமாக 'தேசிய பாதுகாப்பு' என்ற வார்த்தையைப் பிரயோகிப்பது - ஆட்சியாளர்களின் தந்திரோபாயங்களுள் ஒன்று என்பது - தமிழ் மக்கள் அனுபவரீதியில் அறிந்துகொண்ட உண்மையேயாகும்.

ஆனாலும், சமாதானமே தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தலை அதிகமாக்கிவிட்டது எனப் பிரசாரம் செய்வதுதான் ஏற்றுக்கொள்ளமுடியாத விடயமாகும். உண்மையில் நாட்டில் அமைதிக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களும், புரட்சி என்ற பெயரிலும், மக்களின் விடுதலைக்கான முன்னணி என்ற பெயரைப் பயன்படுத்தியும், பல்லாயிரக்கணக்கில் மக்களைக் கொன்றழித்து, பீதிகொள்ள வைத்தவர்களும், இனவன்முறையைத் தூண்டி, இரத்த ஆறு ஓடவைத்தவர்களுமான சமூக, இன, தேசவிரோத நாசகார சக்திகள் - தேசிய பாதுகாப்புக் குறித்து முதலைக்கண்ணீர் வடிப்பதும், உணர்ச்சி வசப்பட்டவர்கள் போன்று பேசுவதும்தான் வினோதமாகவும், வேடிக்கையாகவும் உள்ளது.

பல்வேறுபட்ட அரசியல் சதி நடவடிக்கைக் குற்றங்களுக்காகவும், மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்காகவும், தேசிய நலனுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காகவும் தேடப்பட்டு வந்த நிலையில் - இந்தியா ஊடாக லண்டனுக்குத் தப்பியோடி தலைமறைவாக வாழ்ந்த தேசத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நபர் என அடையாளப்படுத்தப்பட்ட ஜே.வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க என்பவர் இப்போது சந்திரிகாவின் அழைப்பன் பேரில் நாடு திரும்பி, மீண்டும் தன்னை ஒரு பிரபலமான அரசியல்வாதியாகவும், தேச பக்தராகவும், இனங்காட்டும் முயற்சியில் தீவிரம் காட்டத்தொடங்கியுள்ளார்.

இவரது பூர்வீகம் நாற்றம் எடுக்கும் வரலாற்றைக்கொண்டதாகும். தற்போது இவரை உடனடியாகக் கைது செய்யக் கோரும் முறைப்பாடுகள் - பலரிடமிருந்தும் விடுக்கப்படத் தொடங்கியுள்ள வேளையில், அவர் தேசிய பாதுகாப்புக் குறித்தும், நாட்டின் இறைமை குறித்தும், பிராந்திய ஒருமைப்பாடு குறித்தும் பேசத் தொடங்கியுள்ளமைதான் விசித்திரமாக உள்ளது. இலங்கையின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்போது, இந்த மூன்று விடயங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.


தேசிய பிரச்சினை என அவர் குறிப்பிடுவது இனப்பிரச்சினையேயாகும். இனப்பிரச்சினைத் தீர்வுக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவரும்வேளையில், சில பிரச்சினைகள் ஒரு தேக்கநிலையை ஏற்படுத்தியிருப்பதும் உண்மையே. எனினும், போர்நிறுத்தம் இருதரப்பாலும் கடைப்படிக்கப்பட்டு வரும்வேளையில், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என சோமவன்ச கூறுவதிலும் ஒருவிதமான உண்மையிருக்கவே செய்கிறது.

அதாவது, சமாதான முயற்சிகளைக் குழப்பமுயலும் அவரது தலைமையிலான ஜே.வி.பி, மற்றும் சிஹல உறுமய, பிக்குகள் முன்னணி போன்ற தேசவிரோத இனவாதக்கட்சிகளால் நாட்டினதும், மக்களினதும் பாதுகாப்புக்கு அச்சறுத்தல் இருக்கவே செய்கிறது. அதனை அவர் ஒப்புக்கொள்வதையே அவரின் கூற்று வெளிப்படுத்துகிறது. மேற்குறிப்பிட்ட கட்சிகளின் செயற்பாடுகளே இலங்கையின் இறைமைக்கும், பிராந்திய ஒருமைப்பாட்டுக்கும் இதுநாள் வரைக்கும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது என்பதை இதுவரை காலமும் தலைமறைவாக இருந்த இந்த தலைவருக்கு எங்கே புரியப்போகிறது?

நாட்டின் பாதுகாப்பை - சமாதான முயற்சிகளைக் குழப்புவதன் மூலம் ஏற்படுத்தலாம் என நினைக்கும் ஜே.வி.பியும், சமாதானத்தை யுத்தம்மூலம் ஏற்படுத்த முனைந்த சந்திரிகா கட்சியும்- தேசிய பாதுகாப்பு, இறைமை, ஒருமைப்பாடு குறித்து ஓலமிடுவதுதான் வேடிக்கையாக உள்ளது. தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தான இவர்களை இனம்கண்டு, நிராகரிக்கவேண்டியது சிங்கள மக்களின் பொறுப்பேயாகும்.

தமிழ் மக்கள்... இவர்களை இனம் கண்டு வெகு காலமாயிற்று...!

## நாடும் நடப்பும்




# ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்; ரயில்வே சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம்!

மூன்று தினங்களாக தொடரும் ரயில்வே திணைக்கள ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால், ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இதன் காரணமாக, பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரயில்வே திணைக்களம் என்பதை, அடுத்த மாதத்திலிருந்து, ரயில்வே அதிகாரசபையாக மாற்றும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ரயில்வே திணைக்கள ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

ரயில்வே அதிகாரசபை தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை, உடனடியாக ரத்து செய்யுமாறு ரயில்வே திணைக்கள ஊழியர்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர். இதனை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

இது தொடர்பாக ஊழியர்களுக்கும் போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பனவுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது, ரயில்வேதிணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றும் எண்ணத்தை, அரசு இரு வருடங்களுக்கு ஒத்திவைக்க முன்வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இதனை ஏற்றுக்கொள்ள ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்தமையால் அந்தச் சந்திப்பு இடையிலேயே முறிவடைந்தது.

ஊழியர்களுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு, வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு உடனடித் தீர்வு காணுமாறு, பிரதமர், அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டமையால் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக போக்குவரத்து அமைச்சு தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு தற்காலிக பயண அனுமதிகளை வழங்கி வருகிறது.

பஸ் சேவைகளை அதிகரிப்பதன் மூலமாக, போக்குவரத்து சேவைகளை சீர்படுத்த போக்குவரத்து அமைச்சு முயன்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# டக்ளசைக் கொல்ல புலிகள் கொழும்புக்கு வந்துள்ளனராம்!

## ஜே.வி.பிசார்பு இணையத்தளம் கூறுகின்றது

ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவை கொலைசெய்யும் நோக்குடன், இரண்டு பிஸ்டல் குழுத்தலைவர்களைப் புலிகள் அனுப்பி வைத்திருப்பதாக ஜே.வி.பி சார்பு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இரண்டு பிஸ்டல் குழுத்தலைவர்களும், கடந்த வாரம் ஓமந்தை ஊடாக கொழும்புக்கு வந்திருப்பதாக இராணுவப் புலனாய்வுத்துறை, தகவல் தந்ததாக அந்த இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பொதுத்தேர்தலுக்கு முன்னர், டக்ளஸ் தேவானந்தாவை கொன்றுவிட வேண்டும் என்ற நோக்குடனேயே, இவர்கள் களம் இறக்கப்பட்டிருப்பதாகவும் - டக்ளஸ் தேவானந்தா புலிகளின் தாக்குதல் பட்டியலில் முதலிடத்தில் இருப்பதாகவும் அந்த இணையத்தளச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தென்மராட்சி முறைசாராக் கல்வி; பரீட்சைகள் பெப்ரவரியில் ஆரம்பம்!

தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் கடந்த ஆண்டுக்கான பரீட்சைகள், பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான கணினிப் பரீட்சைகள் அறிமுகப் பரீட்சைகள் என்பன, பெப்ரவரி 10 ஆம் 11 ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன், மட்டுவில் கமலாசினி ஆகிய பாடாசலைகளில் இயங்கும், நிலைய் மாணவர்களுக்கான பரீட்சைகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலகத்தில் நடைபெறவுள்ளன.

உடையமைத்தல் பயிற்சிநெறி, மாணவர்களுக்கான பரீட்சைகளும் - சுருக்கெழுத்து, தட்டெழுத்து அறிமுறை, செய்முறைப் பரீட்சைகளும் 7 ஆம் திகதி நடபெறவுள்ளன். மேலதிக விபரங்களை தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என, வலயக கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார். (25)

# மாகாணசபைத் திருத்தச் சட்டமூலம் அரசியல் யாப்புக்கு முரணானது அல்ல

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

மாகாணசபை திருத்தச் சட்டமூலம் அரசியல் யாப்பிற்கு முரணானது அல்ல என, சட்டமா அதிபர் மாகாண அமைச்சுக்களின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, மாகாணசபை திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டு, தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த திருத்தச் சட்டமூலத்திலே பல புதிய திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

அதன்படி மாகாணசபைகளுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை இனிவரும் காலங்களில் அதிகரிக்கப்படவுள்ளது. அத்தோடு, மாகாணசபைகளுக்கான கூட்டங்கள் தேர்தல்கள் என்பன, சனிக்கிழமைகளிலேயே நடைபெறவுள்ளதுடன், அனைத்து மாகாணசபைகளுக்கான தேர்தல்களும், ஒரே நாளிலேயே நடத்தப்படவுள்ளன.

இந்த நிலையில், இந்தத் திருத்தச்சட்டம் தொடர்பாக கருத்து வெளியிட்ட சட்டமா அதிபர் கமலசபேசன், இந்தச் சட்டம்மூலம் அரசியலமைப்பின் 13 ஆவது பிரிவிற்கு முரணானது அல்ல. எனவே, இதனை நடைமுறைப்படுத்துவதிலே எதுவித சிக்கல்களும் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பான அறிக்கைகளையும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார். (01)

ஆய்வரங்கம் - சேனாதிராசா ஜெயானந்தன்

# பன்முகப் பயன்பாடு நிறைந்த முள்ளிக் கிராமம் பயன்படாமற் போகுமா?

எமது நாட்டில் பல வளமான எழில்மிகு பிரதேசங்கள் உண்டு. இவை குளிர்கால நகரங்கள், வறள்கால நகரங்கள் எனக் கால நிலை வேறுபாட்டிற்கு ஏற்ப எழில்கொஞ்சும் பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. ஈழத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேசமும் ஏதோ ஒரு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவை வரலாற்றுரீதியாகவோ, பண்பாட்டு ரீதியாகவோ, வளப்பயன்பாட்டுரீதியாகவோ அல்லது இயற்கை எழில் அமைப்பு ரீதியாகவோ கேந்திர முக்கியத்துவம் பெறுகின்றன என்றால் மிகையாகாது.

இந்தவகையில் யாழ். மாவட்டத்தில் பரந்த விஸ்தீரணமான நிலப்பரப்பையும், இயற்கை எழிலையும், வரலாற்றுச் சிறப்பையும், பொருளாதார முக்கியத்துவத்தினையும்கொண்ட பண்பாட்டுக்கோலம் நிறைந்த கிராமமான வரணியிலுள்ள குடிசன மற்ற ஒரு பிரதேசமான 'முள்ளி' நிலப்பரப்புப் பற்றியே இங்கு குறிப்பிடப்படவுள்ளது.

இந்தப் பிரதேசமானது வரணியில் முகத்துவாரப் பிரதேசமாக அமைந்துள்ளதோடு, வடமராட்சியின் அந்தமாகவும், தென்மராட்சியின் ஆதியாகவும், இயற்கை வளங்கள் நிறைந்த கடனீரேரிப் பகுதியாகவும் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியானது, கோடை காலத்தில் வரண்டு காணப்பட்டாலும், பருவகாலத்தில் கண்கொள்ளாக்காட்சியாகும். அத்தோடு, இங்கு அதிகளவான தாழ்நிலங்களும் குறைந்தளவிலான மேட்டு நிலங்களும் காணப்படுவதோடு, இவற்றினை அண்டிய பிரதேசங்கள் பனை வளத்தினையும், நெல்விளையும் நிலங்களையும் கொண்டுள்ளன.

வரணியில் காணப்படும் இந்த முள்ளிப் பிரதேசத்தினை நோக்குகையில் -

இங்கு மழைகாலங்களில் அதிகளவான மழைநீர்தேங்கி அவைபின் பருத்தித்துறை - கொடிகாமம் வீதிவழியே காணப்படும் பாலங்களினூடாக வல்லை உவர்நீர் ஏரியைச் சென்றடைகின்றன.

இந்தப் பிரதேசத்திலிருந்து வழிந்தோடும் பெருவாரியான நீரானது - மனித தேவைக்குப் பயன்படுத்தக்கூடிய உவப்பற்ற நன்னீராகும். இத்தகைய நன்னீரானது எதுவித பயன்பாடும் அற்று வீணே உவர்நீர் ஏரியில் கலந்து சங்கமமாகிவிடுகின்றன.

இந்த நீரினை நாம் அணைக்கட்டுகள் கொண்டு தேக்குவதனால், இந்தப் பிரதேசத்தோடு அண்டிய பல ஹெக்ரேயர் நெல்விளையும் நிலங்களுக்கு நீர்விநியோகம் மேற்கொள்ளலாம். இதனூடாக இந்தப்பிரதேச விவசாயிகள் - சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளமுடிவதோடு, அவர்கள் தம் வாழ்க்கை நிலையையும் மேம்படுத்தக்கூடியதொன்றாக அமைகின்றது. மேலும் இந்தச் செயற்திட்டமானது, பல தொழிலாளர்கள் நேரடியாகவோ அலலது மறைமுகமாகவோ தொழில் வாய்ப்பினைப் பெறவழியுண்டாகின்றது.

அத்துடன், இந்தப் பகுதிகளில் பருவகாலங்களில் நீர்நிரம்பி வழிவதால், நீர்வாழ் உயிரினங்கள் பல இங்கு காணப்படுவதோடு, பலவகையான மீனினங்கள் மற்றும் நண்டு, இறால் என்பனவும் நிறைந்துள்ளன. ஆனால், இப்பகுதியானது இப்பொழுது கட்டுப்பாடற்ற மீன்பிடிக்களமாகக் காணப்படுகின்றது. எனவே, இதனை நாம் சிறந்ததொரு நீர்வள முகாமையின்கீழ் கொண்டுவருவோமாயின், பருவகால மீன்பிடி உற்பத்திமூலம் பலகோடி ரூபாக்களை வருமானமாகப் பெறலாம்.

இங்கு பிடிக்கப்படும் மீன்கள் சுவை மிகுந்தவையாகக் காணப்படுவதால் இந்த மீன்களுக்கான கிராக்கி அதிகமாகும். இங்கு முக்கியமாக விலாங்கு எனப்படும் ஒருவகை மீனினத்திற்கு மக்கள் மத்தியில் அதிக வரவேற்புக் காணப்படுகின்றது. ஏனெனில், இந்த மீனினம் அதிக மருத்துவகுணம் கொண்டதோடு, இந்தப்பகுதியில் பிடிக்கப்படுபவை மிகுந்த சுவை கொண்டதாகவும் அமைவதால் ஆகும்.

இவற்றைவிட இங்கு காணப்படும் நண்டு, இறால் என்பனவும் முக்கியம் பெறுகின்றன. எனவே, இவ்வாறான மீனினங்கள் இங்கு காணப்படுவதால் இப்பகுதியினை ஒரு சிறந்த இறால் பண்ணையாகவோ அல்லது நண்டு உற்பத்திப் பண்ணையாகவோ மாற்றி, அதிகளவான வருவாய் ஈட்டக்கூடியதாக அமைகின்றது.


இதனை மேற்கொள்வதனூடாக குறிப்பாக, இறால் உற்பத்திக்குக் குறிப்பிடத்தக்க வரவேற்பு தென்னிலங்கையில் காணப்படுவதால், இதன் உற்பத்தியானது இந்தப் பிரதேசத்திற்கு பாரிய வருவாயையும், அதனூடே இந்தக் கிராமம் அபிவிருத்தி ஏற்பட வாய்ப்பினையும் உண்டாக்குகின்றது.

மேலும இந்தப் பகுதியானது பருவகாலங்களில் நீர்நிரம்பி வழிவதோடு, எங்குபார்த்தாலும் பச்சைப்பசேல் என்ற காட்சி அமைவானது மனதுக்கு இதம்தருவதாக அமைகின்றது. இந்தப்பகுதியில் இக்காலத்தில் அதிகளவான உள்ளூர், வெளியூர் பறவையினங்கள் வந்து செல்கின்றன.

இத்தகைய கள அமைவானது, அதாவது நிறைந்து தளும்பும் நீர் ஏரி, பரந்த வெளியுடன கூடிய கருகருவென காட்சியளிக்கும் கண்டல் காடு, குவிந்த மீனினங்களின் துள்ளல் வடிவங்கள், பறக்கும் பறவைகளின் பஞ்சவர்ணங்கள், சுட்டெரிக்கும் சூரியக்கதிர்கள், மாலைப் பொழுதியின் நிலாவெளிச்சம் என்பன ஒரு இயற்கையுடன்கூடிய இடவமைவாகக் காணப்படுவதால், இந்த வீதியில் செல்லும் பலர் இக்காட்சியினைத் தரித்துநின்று நுகர்வதோடு - நீர்க்குளியல், சூரியக்குளியல் என்பவற்றை மேற்கொண்டு தமது பொழுதைக் கழிப்பதால், அவர்களது மன இறுக்கம் தளர்ந்து, இயல்பு நிலை ஏற்பட வழி ஏற்படுகின்றது.

ஆனால், இத்தகைய இயற்கைச் சமனிலையானது இன்று பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. மீனினை வேட்டையாடும் மீன





வர்கள், பறவைகளை வேட்டையாடுபவர்கள், துப்பாக்கி ஏந்திய படைவீரர்களின் பிரசன்னம் என்பவையும், விதைக்கப்பட்ட மிதிவெடிகள், தடுக்கப்பட்ட அணைக்கட்டுக்கள், அழிக்கப்பட்ட தாவரங்கள், அதிகரித்த இராணுவ காவல வேலிகள் என்பன இத்தகைய இயற்கைச் சமனிலை கெடுதலுக்குக் காரணமாகியுள்ளது.

இப்பிரதேசமானது ஓர் இயற்கைச் சரணாலயம் போனறு காணப்படுவதால், இப்பகுதியில உயிரினங்கள் வேட்டையாடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதோடு, இப்பகுதியானது உல்லாசப் பயணிகளின் மனங்களைக் கொள்ளை கொள்ளத்தக்க இயற்கை எழில் காட்சிகள் காணப்படுவதால், இப்பகுதிக்கு அண்மையில் உள்ள மேட்டு நிலத்தில் உல்லாசப்பயணிகள் ஹொட்டல்கள் அமைத்து, அவர்களின் வரவை பருவகாலத்தில் ஊக்கப்படுத்துவதால் இப்பிரதேசத்தில் உல்லாசப் பயணக்கைத்தொழில் வளர்ச்சிபெற வழிவகுக்கும் என்பதோடு, இப்பகுதி போக்குவரத்து, வர்த்தகத் தொடர்பு என்பனவற்றில் முன்னேற்றம் காணப்படுவதோடு, பயனற்றுக் கிடக்கும் மனிதவளமும் மறுபயன்பாடடையும்.

இப்பகுதிக்கு அண்மையிலே வரலாற்று பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்திருப்பதாலும், செல்வச் சந்நிதி ஆலயத்துக்கு நேரடியான வீதி இருப்பதாலும், மீன வளம் நிறைந்த குடத்தனைத்துறை அண்மையில் காணப்படுவதாலும், பருத்தித்துறை துறைமுக வீதியானது இப்பகுதியூடாகச் சென்று, கொடிகாமத்தில் கண்டி வீதியுடன் இணைவதாலும், அண்மையில் கடலும், களனிகளும் அமைந்துளளதால் - உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்குச் சிறந்ததொரு இட அமைவாகும்.

மேலும் இப்பிரதேச வளங்கள் பற்றி நோக்குகையில், முள்ளிப்பகுதியில் குடிசைக் கைத்தொழிலுக்குரிய மூலப்பொருள் ஒன்று பாரியளவில் விளைகின்றது. இங்கு "புற்பாய்" உற்பத்திக்கான "பன்புல்" அதிகளவில் உற்பத்தியாகின்றன.

இப்பன்புல்லானது இதன் அயல் கிராமமான கறுக்காய் வாழ்மக்களால் அறுவடை செய்யபட்டு, அவை பதனிடப்பட்டு பாய் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் பருவகால தொழில்வாய்ப்பை பெறக்கூடியதாக உள்ளது.

இங்கு குறிப்பிடவேண்டிய முக்கிய விடயம் யாதெனில், இந்தப் பன்புல் உற்பத்தி பகிர்வில் போட்டி மனப்பான்மையேற்பட்டு, அவை சிலவேளைகளில் உரிய விளைவைப் பெற முன்பே அறுவடை செய்யப்பட்டு உற்பத்திக்கு உதவாத ஒன்றாக அமைந்து விடுவதுமுண்டு.

எனவே, இத்தகைய நிலைமையினைத் தடுப்பதற்கு இதற்கென ஒரு முகாமை நிர்வகிக்கப்படுமாக இருந்தால் நன்றாகும். அவ்வாறு நிர்வகிக்கப்படுமாயின் - இயற்கைவளமும், மனித வளமும் சிறந்தமுறையில் இணைவுபெற்று, தகுதிபெற்ற உற்பத்தி ஒன்று உருவாக வழி ஏற்படும்.

இது இப் பொருளுக்கான சந்தை வாய்ப்பினைப் பெருக்குவதோடு, இதனூடே குடும்ப பொருளாதார முறைகளிலும் முன்னேற்றகரமான மாற்றம் ஏற்படும். இவை சமூக அபிவிருத்தி மட்ட உயர்வை தூண்டி, பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தும்.

இவை எல்லாவற்றினையும்விட, இங்கு காணப்படும் தாவரங்கள் சிறப்புமிக்கவையாகும். இவை இப்பிரதேசத்துக்கென்றே உருவாக்கப்பட்டதுபோன்ற செயல் அமைப்புக்களைக் கொண்டவையாகும். இங்கு காணப்படும் கண்டல், பொற்பத்தை என்பன சதுப்பு நிலத்துக்கு என்றே விசேட இயல்புகளைக் கொண்ட தாவர அமைப்புக்களாகும்.

இவை சிக்கனமான சிறந்த எரிபொருள்களாக பயன்படுவதால், யாழ்ப்பாணம் எரிபொருட் தட்டுப்பாட்டிற்கு உட்பட்ட காலத்தில் இவையே சிறந்த விறகாகக் கைகொடுத்தன எனலாம். இக்காலப்பகுதியில் இந்த மரங்கள் விறகுக்காக அதிகளவில் வெட்டப்பட்டமையாலும், பல குடும்பங்கள் விறகு விற்பனையே தமது ஜவனோபாய தொழிலாகக் கொண்டிருநததமையாலும், பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இராணுவ முன்னேற்றம் நிலைகொள்ளல் என்பன காரணமாக, இராணுவத்தின் 'துப்பரவுக் கொள்கை' யாலும் பெருமளவு மரங்கள் வெட்டப்பட்டு விட்டன.

இவ்வாறு இவை அழிக்கப்படுவதால், இயற்கைச் சமநிலை பாதிக்கப்பட வாய்ப்பு அதிகம் உண்டாகின்றது. இத்தாவரங்களால் இப்பகுதியானது கோடை காலங்களிலும் பச்சைப்பசேல் என்று கண்ணிற்குக் குளிர்மையாகக் காட்சி தருகின்றன.

இப்பகுதியில் காணப்படும் "தில்லை" என்ற தாவரம் சிறந்ததொரு இயற்கைச் சமநிலை தாங்கியாகும். ஏனெனில், இத்தாவரமானது எத்தகைய வரட்சி ஏற்பட்டாலும் அலலது அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும் அழிவடையமாட்டாதவை.

இத்தாவரமானது இவை 'அனைத்தையும் தாங்கி வளரும் வாய்ப்புக்கொண்டதோடு. எப்பொழுதும் பச்சைப்பசேல் என்று காட்சி தருவதோடு, இவை தம்மை எவரும் அணுகாதபடி சுயபாதுகாப்புக் கொள்கையும் கொணடுள்ளன. அதாவது இதன் பாலானது உடலில் பட்டால் எரியும், அழற்சி என்பன ஏற்படுவதோடு, இதன்விறகை நாம் பயன்படுத்தும்போது அதன புகையானது எமது சுவாசத்திற்கு ஒத்துவராது அழற்சியைத் தூண்டுகின்றன. இத்தகைய பாதுகாப்பு முறைகளால் இந்தத் தாவர அழிவானது கட்டுப்படுத்தப்படுகின்றது.

இதனால் இத்தாவரத்தின் பெருக்கமானது இப்பகுதி இயற்கைச்சமநிலையைப் பேண சிறந்த கொடை வழங்கியாக அமைகின்றது.

மேலும் இப்பகுதியானது சிறந்த இறைச்சி உற்பத்தி நிலையமாகவும் காணப்படுகின்றது. கோடைகாலங்களில் இங்கு பன்றி, முயல், உடும்பு, அணில், ஆமை என்பன வேட்டையாடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இங்கு முதலை, சிறுத்தைப் புலி, நரி, குரங்கு போன்ற தொல்லைதரு விலங்குகளும் காணப்படுகின்றன.

இப்பகுதியின் கிழக்கு, வடக்குப் பக்கமாகப் பல மேட்டு நிலங்கள் காணப்படுகின்றன. இவை மழைகாலங்களில் சிறிய தீவு போன்று அழகாகக் காட்சி அளிக்கின்றன.

இந்நிலங்களில் கடந்த காலங்களில் மிளகாய், புகையிலை, கத்தரி, தக்காளி, வெங்காயம் போன்ற பயிர்கள் செய்கைபண்ணப்பட்டு அதிக வருமானம் ஈட்டப்பட்டன. இவை"தூ" தோட்டங்கள் என ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டன.

ஆனால், இன்று இவை இராணுவக் காவலரண்கள் மற்றும் பாதுகாப்பு அணைக்கட்டு, மிதிவெடி அபாயம், முட்கம்பித்தடுப்புவேலி என்பன காரணமாக அங்கு செல்லும் பாதைகள் முடக்கப்பட்டு, வெறும் தரிசு நிலமாகக் காட்சியளிக்கின்றன. இதனால் இப்பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் வறுமை நிலைக்கு ஆட்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. மேலும் இதனை அண்டியபகுதிகளில் அதிக பனைவளம் காணப்படுவதோடு, அவற்றின் விளைபொருட்களைப் பதப்படுத்தி விற்பனை செய்யும் இரு தொழிற்சாலைகளும் இயங்கின.

1. கருப்பட்டித் தொழிற்சாலை - கறுக்காய்
2. வடிசாலைத் தொழிற்சாலை - மாசேரி

ஆனால், இவை இரண்டும் இன்று இராணுவ நடவடிக்கையால் செயலற்றுக் கிடக்கின்றன. இதற்குப் பிரதான காரணங்களாகக கூறப்படுபவை,

1.பனை மரங்கள் இராணுவ பாதுகாப்பரண்களுக்காக வகை தொகையின்றி தறித்து வீழ்த்தப்பட்டமை.

2. இத்தொழிற்சாலைக் கட்டடங்கள் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டன அல்லது அவர்களின் பாதுகாப்பு எல்லைக்குள் இருக்கின்றமை.

என்பனவே பிரதான காரணங்களாகக் கூறப்படுகின்றன. இந்நிலையானது இதனோடு தொடர்புடைய தொழில் வாய்ப்பினைக் கொண்ட சமூக அமைப்பினை, அவர்களின் வாழ்வு நிலைப் புள்ளியை இழிவுநிலைக்கு தள்ளியது எனலாம்.

இது அரசுக்கு இலவச உலர் உணவுக் கொடுப்பனவிற்கான செலவை அதிகரித்ததோடு, அவர்களின் "மனிதவளத்தினை" சோர்வடையச் செய்யும் நிலையினைத் தோற்றுவித்தது எனலாம். இத்தகைய சோர்வடைந்த மனிதவளமானது - எதிர்காலத்தில் தங்கியிருப போர் தொகையினை அதிகரித்து, "வினைத்திறனற்ற " ஒரு சமூக அமைப்பினைத் தோற்றுவித்துவிடலாம். எனவே, இந்த மனிதவளங்கள் மறு பங்கீடுசெய்யப்பட வேண்டியது முக்கியமானதொன்றாகும்.

இப்பகுதியானது - வளர்ந்த மரங்கள் அற்ற பரந்த வெளியாக இருப்பதால், காற்று விசை அதிகமாக காணப்படுகின்றது. இவ்வாறு அதிகரிக்கும் காற்றுவிசைக் காலங்களில் பாரிய காற்றாடிகளைப் பொருத்தி அதன் சுழற்சி விசையினை டைனமோ மூலம் மின்சாரமாகப் பெறமுடியும். அத்தோடு, இப்பகுதியில் அதிக சூரியவெப்பம் கிடைப்பதால் சூரிய அடுப்புக்களைப் பயன்படுத்தி மின்னைச் சேமிக்கமுடியும். இவ்வாறு பெறப்படும் மின்சாரத்துக்கான உற்பத்தி செலவு குறைவாக இருப்பதனால், நுகர்வோர் குறைந்த செலவில் அதிகளவான பயன்பாட்டினைப் பெறலாம். எனவே இத்தகைய இயற்கை வள ஆய்வுகள் ஈழவளநாட்டில் மிகமுக்கியமான தொன்றாகும்.

மேலும் இப்பகுதியில் காணப்படும் மண் அமைப்பானது, ஒரு வித்தியாசமான சிறப்பியல்பினைக் கொண்டுள்ளதுடன், இவை பெருமளவில் வீதி அபிவிருத்திக்கும் பயன்படுத்த சிறந்த மண்ணாக (ஊரிமணல்) அமைவதால், இவைநாளுக்கு நாள் திருட்டுப் போனவண்ணமே உள்ளன. *(தொடரும்)*

# பிரதமரின் வாசஸ்தலம் அருகே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## ஜெருசலேமில் 10 பேர் உடல் சிதறிப் பலி

இஸ்ரேல் பிரதமர் 'ஏரியல் ஷரோ'னின் வாசஸதலத்துக்கு அருகில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 12 ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

வைத்தியசாலை ஒன்றில், இரவுப் பணியினை முடித்துவிட்டு தமது வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தவர்கள் பயணம் செய்த பஸ்வண்டி ஒன்றின் மீதே இந்தத் தறகொலைக் குண்டுத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

ஜெருசலத்தின் மேற்குப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றவேளையில், இஸ்ரேல் மற்றும் லெபனானின் 'ஹிஸ்புல்லா' போராளிக்குழுக்கள் ஆகியவற்றுக்கிடையே கைதிகள் பரிமாற்றம் இடம் பெற்றுள்ளது. இந்தக் கைதிகள் பரிமாற்றத்தில் நூற்றுக்கணக்கான பலஸ்தீனப் போராளிகள் அடங்கியிருந்தனர்.



தற்கொலைக் குண்டுத் தாக்குதல், கைதிகள் பரிமாற்றம் ஆகிய இரண்டு சம்பவங்களுக்குமிடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இதுவரை எந்த அமைப்பும் இந்தத் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை. ஆனாலும், பலஸ்தீன அதிகாரசபை இந்தத்தாக்குதலுக்கு ஆதரவு அளித்து வருவதாக இஸ்ரேலிய அரசாங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

தமது எல்லைப் பிரதேசத்திலிருந்து நடத்தப்படும் வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவதில் பலஸ்தீன் அரசு எதுவித முயற்சிகளையும் எடுக்கவில்லை என இஸ்ரேலிய பிரதமரின் பேச்சாளர் 'டேவிட் பேக்கர்' தெரிவித்துள்ளார்.

தமது மக்களைக் காப்பாற்றுவதற்காக இவ்வாறான பயங்கரவாதச் செயல்களுக்கு எதிராக இஸ்ரேல் போராட வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான பஸ் வண்டி பல பாகங்களாகச் சிதறியுள்ளது. உடைந்த பாகங்களையும், சிதைந்த உடல்கள் 'பிளாஸ்ரிக்' போர்வைகளினால் சுற்றப்பட்ட நிலையில் கிடப்பதனையும், பாதை எங்கிலும் காணக் கூடியதாக இருந்ததாக பி.பி.ஸியின் ஜேம்ஸ் நெய்பேர்ட் தெரிவித்துள்ளார்.

# சுப்பிரமணிய சுவாமி மதுரையில் போட்டியிடுவாராம்!

தமிழகத்தில 8 நாடாளுமன்றத் தொகுதிகளில் எங்களுக்கு மிகப்பெரிய வாக்குவங்கி உள்ளது. இருப்பினும் மதுரையில் மட்டும் போட்டியிட முடிவுசெய்துள்ளேன். மற்றத் தொகுதிகளில் அ.தி.மு.கவுக்கு ஆதரவளிக்கப்போகிறோம் என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் சுவாமி பேசுகையில் தமிழகத்தில் - மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, தென்சென்னை, சிவகாசி, உள்ளிட்ட 8 தொகுதிகள் எங்களுக்கு மிகப் பெரியவாக்கு வங்கியுள்ளது.

ஆனால் இதில் மதுரையில் மட்டும் போட்டியிட நாங்கள் முடிவுசெய்துள்ளோம். நானே மதுரையில் போட்டியிட உள்ளேன்.

எங்களைக் கூட்டணிக்கு சேர்த்துக்கொள்ளாவிட்டாலும், அ.தி.மு.கவை ஆதரிப்போம் எங்கள் கட்சியினர் அ.தி.மு.கவுக்குப் பிரச்சாரம் செய்வர், வாக்களிப்பர்.

மதுரை எம்.பி தொகுதிகளில் எங்களது கட்சியின் வேட்பாளர்கள் யார் என்பதை வருகிற பெப்ரவரி 3ம் திகதி டெல்கியில் நடைபெறும் தேசிய செயற்குழுக்கூட்டத்தில் முடிவு செய்து அறிவிப்போம்.

தி.மு.க தலைமையில் கூட்டணி ஒரு தொகுதியில்கூட வெற்றி பெறாது, காங்கிரஸ் கட்சிக்குத் தலைவர் யார் என்றே தெரியவில்லை என்றார்.

# பிலிப்பைன்ஸ் அரசை நிலைகுலைக்க வேவு பார்த்த இராணுவ அதிகாரிகள்!



எதிர்க்கட்சியினரை வேவு பார்ப்பதற்காக அரசாங்கம் இராணுவத்தினரை பயன்படுத்தியுள்ளதாக, தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்த ஐந்து இராணுவ அதிகாரிகளை பிலிப்பைன்ஸ் அரசாங்கம் கைது செய்துள்ளது.

பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தை நிலை குலைச் செய்வதற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதி குளோரியா சுரொயோ தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் தேசியக்கொடிக்குப் பின்னால், தமது முகத்தை மறைத்து மேற்குறிப்பிட்ட கருத்துக்களை ஐந்து இராணுவ அதிகாரிகளும் தெரிவித்திருந்தனர்.

மே மாதம் நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள எதிர்க்கட்சியின் செயற்பாடுகளைத் தாம் வேவு பார்த்ததாகவும், இதனால், பாதுகாப்பு அமைச்சர் இருசுர்டோ எர்மிர்றா தனது பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும் எனவும், கைது செய்யப்பட்ட இராண்ுவ அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இராணுவப் புரட்சி மூலம், அரசாட்சியைக் கைப்பற்றுவதற்கு பல முறை சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடம் யூலை மாதம் 300 அதிகாரிகள் அரசுக்கு எதிராக சதிப்புரட்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மரண தண்டனைக் குற்றவாளி தண்டனைக் குறைப்பு பெற்றார்!

நூற்றுக்கணக்கானோரைப் பலி கொண்ட 'பாலித்தீவு' குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று குற்றவாளிகளில் ஒருவரின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட 'சுஜிவோ' இந்தச் சம்பவத்தில் ரேரடித் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்ற விசாரணைகளின் முடிவினை அடுத்தே இந்தத் தண்டனைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளத.

இக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக இதுவரை மூவர் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், 20 பேருக்கு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

ஆயுள் தண்டனைக் கைதியாக மாற்றப்பட்டிருக்கும் 'சுஜிவோ' கிறிஸ்தவ சமயத்தில் இருந்து இஸ்லாமிய சமயத்துக்கு மாறியவர். குண்டுத்தாக்குதலுக்குத் தேவையான வெடிமருந்தினைத் தயாரித்து அதனை வண்டி ஒனறில் நிரப்புவதற்குத் துணை புரிந்தார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தீர்ப்பு வழங்கப்பட்ட நேரத்தில் எதுவித உணர்வுகளையும் இவர் வெளிப்படுத்தவில்லை எனத் தீர்ப்பு வழங்கிய நீதிபதி 'அரிவ் சுப்பிராட்மன்' தெரிவித்துள்ளார்.

பாலித்தீவு குண்டுத்தாக்குதல் 'ஜெமா இஸ்லாமியா' எனப்படும் 'அல்கொய்டாவுடன் தொடர்புள்ள இஸ்லாமியத் தீவிரவாதக்குழு ஒன்றினால் 2002 ஆம் ஆண்டு இரவு விடுதி ஒன்றில் நடத்தப்பட்டது.

குண்டுத்தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இவர்களில் அதிகமானவர்கள் வெளிநாட்டுப் பிரஜைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குண்டுத்தாக்குதலைத் திட்டமிட்டு செயல்படுத்தியவர்களில் அனேகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனாலும், மிக முக்கியமான சந்தேக நபர்களான 'சாரிகவின்', 'குல்மற்றின்' ஆகிய இருவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.




# ஜேர்மனிக்குச் சென்ற விமானத்தில் இறந்தவர்களின் மூன்று சடலங்கள்!

மத்திய கிழக்கிலிருந்து புறப்பட்ட இரு விமானங்கள் ஜேர்மனி போய்ச்சேர்ந்துள்ளன.

இவற்றில் ஒன்று லெபனானின் தலைநகர் 'பெய்ரூட்டில்' இருந்து ஒரு இஸ்ரேல் வர்த்தகருடனும், மூன்று மரணமடைந்த போர் வீரர்களின் உடல்களுடனும் மற்றைய விமானம் முப்பது அராபியர்களுடனும், ஒரு ஜேர்மனியப் பிரஜையுடனும் ஜேர்மனியை அடைந்துள்ளன.

மரணமடைந்த மூன்று இஸ்ரேலியப் படையினரும் கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் லெபனானின் வடக்குப் பகுதியில், 'ஹிஸ்புல்லா' போராளிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள்.

கடந்த புதன்கிழமை இந்த மூன்று இஸ்ரேலியப் போர்வீரர்களும் மரணமடைந்துள்ளதாக புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஹிஸ்புல்லா போராளிகள் தெரிவித்திருந்தனர்.

ஜேர்மனின் நகரான கொலோனில் அமைந்துள்ள விமானத்தளத்திற்கு ஜேர்மனியின் இராணுவ விமானம் இஸ்ரேல் கைதிகளையும், இஸ்ரேல் இராணுவ விமானம் லெபனான் கைதிகளையும் பரிமாற்றத்துக்கு அழைத்து வந்திருந்தன.

ஜேர்மனியின் வழிநடத்துதலில் லெபனான் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளிடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின்பிரகாரம் இஸ்ரேல் 400 அராபிய கைதிகளையும், 59 லெபனானின் தீவிரவாதிகளையும் விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நேரத்தில், இஸ்ரேலிய விமானியான ரொன் அராட் காணாமல் போயிருந்தார். இவர் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு லெபனானும் உடன்பட்டிருந்தது. 1979 ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த லெபனான் போராளியை விடுவிக்க சம்மதித்திருந்தது.

பரிமாற்றத்தில் சம்பந்தப்பட்டிருந்த மூன்று இஸ்ரேலியர்களின் உடல்களையும் இஸ்ரேலிய தடயவியலாளர்களும், இராணுவ அதிகாரிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தி நிரூபித்த பின்னரே கைதிகள் பரிமாற்றம் தொடரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெருசலத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்று நிகழ்ந்த வேளையிலும், கைதிகள் பரிமாற்றம் எதுவித பாதிப்புமின்றி நடைபெறும் என இஸ்ரேல் அதிகாரி ஒருவர் பி.பி.ஸி செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்தார்.




## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கூறுவிலை கோரல்

பரமேஸ்வரா ஒழுங்கை, திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப்படிப்புகள் அலகு இரு அடுக்கு கட்டிடம் மற்றும் அதனோடமைந்த காணியில் சுத்திகரிப்பு/தேவையற்ற வளரிகள் வெட்டிப் பராமரித்தல் வேலைக்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் கூறுவிலைப்படிவங்களை யாழ். •பல்கலைக்கழக உதவிப்பதிவாளர்/ நிர்வாகம் அவர்களிடமிருந்து பின்வரும் வைப்புத் தொகைக்கான பணத்தை செலுத்தியதற்கான யாழ். பல்கலைக்கழக காசாளரது பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 10.02.2004 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூபா 3000/=
மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 250/=

பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்படிவங்கள் 13.02.2004 அன்று பி.ப 3.00 மணிக்கு முன்பதாக யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்பட வேண்டும்.

கூறுவிலைப்படிவங்களை, தேவைப்படின் யாழ்ப்பாணப்பல்கலைக் கழக நிர்வாகக்கிளையில் வேலை நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி பார்வையிடுவதுடன், மேலதிக விபரங்கள் ஏதாவது தேவைப்படின், யாழ்.பல்கலைக்கழக உதவிப்பதிவாளர்/ நிர்வாகத்திடமிருந்து (தொலைபேசி இலக்கம்:- 021 222 6517) பெற்றுக்கொள்ளமுடியும்.

திருமதி.நா.தங்கராசா,
பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

தபால் பெட்டி இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி/2188)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மது போதையில் பொதுமக்களை தாக்கிய பொலிஸ்காரர் யாழ்.நகரில் கைதானார்!

(யாழ்ப்பாணம்)

கடமை நேரத்தில் மது போதையில் நின்று பொதுமக்களைத் தாக்கிய பொலிஸார் ஒருவர் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி கொடுத்த முறைப்பாட்டையடுத்து யாழ்.பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இந்தச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, யாழ். சத்திரச் சந்திப் பகுதியில் நேற்று மாலை முதல் கடமையில் நின்ற யாழ். பொலிஸ நிலையத்தைச்சேர்ந்த பொலிஸார் ஒருவர் மது அருந்திவிட்டு அந்த வீதியூடாகச் சென்று வந்த பொது மக்களைக் கண்டபடி கைகளால் தாக்கியுள்ளார்.

அந்தவீதியூடாக வந்த ஓட்டோ ஒன்றை மறித்த அவர் அதிலிருந்த ஓட்டோச் சாரதியை கீழே இறக்கியதுடன், அவரைக் கண்டபடி தாக்கினார்.

வீதியில் நின்று இழிவான வார்த்தைகளால் பேசியபடி ஓட்டோவின் சாரதி தாக்கப்படுவதை அங்கு நின்ற சட்டத்தரணி ஒருவர் அவதானித்ததுடன் இந்த விடயம் தொர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு அறிவித்தார்.

உடனடியாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பாளர் றுவான் சந்திரசேகரா மற்றும் அந்த அலுவலகத்தைச் சேர்ந்த விசாரணை அதிகாரி து.சுரேந்திர ராஜா ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று நிலமையை உறுதிப்படுத்திக் கொண்டதுடன் யாழ. பொலிஸ நிலையம் சென்று இந்தவிடயம் தொடர்பான முறைப்பாட்டையும் வழங்கினர்.

இதனையடுத்து, உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்த யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிகள் மது போதையில் நின்ற பொலிஸாரை கைது செய்தனர்.

இவர் இன்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுவதுடன், இவர் மீது மனித உரிமை மீறல் தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக இணைப்பாளர் றுவான் சந்திரசேகர தெரிவித்தார். (ப)

# படையினரின் சித்திரவதைகள் குறித்து ஆராய்வதற்கு சர்வதேச நிபுணர் குழு!

## இன்று யாழ்ப்பாணம் வருகிறது

(யாழப்பாணம்)

யாழ். குடாநாட்டில் போர் நடைபெற்ற காலத்தில் படையினரால் கைதாகி சித்திரவதைக்கு உட்படுத்தபட்டோர் தொடர்பாக ஆராய்வதற்கு, சர்வதேச நிபுணர் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

சர்வதேச சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டோரின் புனர்வாழ்வுச் சபை என்ற அமைப்பின் உயர்மட்ட அதிகாரிகள் இந்தக்குழுவில் இடம் பெற்றுள்ளார்கள்.

இந்தமாதம் 26ஆம் திகதி கொழும்புக்கு வந்த இந்தக்குழு, நீதித்துறை சார்ந்தவர்களையும், மனித உரிமை அதிகாரிகளையும், வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகளையும் சந்தித்து, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டோர் தொடர்பாக ஆராய்ந்தது.

இன்று யாழ்ப்பாணம் வரும் இந்தக்குழுவினர் மதகுருமார்களையும், அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும், வெகுஜன அமைப்புப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளனர்.

குடாநாட்டில் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட அனைவரின தும் விபரங்களையும் திரட்டி, அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் இயங்கும் இக் குழுவில் உலக சுகாதார நிறுவனம், துருக்கி மனித உரிமைகள் நிறுவனம், லண்டனில் உள்ள மனித உரிமைகள் அமைப்புகள் என்பன அங்கம் வகிக்கின்றன.

# யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ்.பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக தீவகப் பொலிஸ் அதிகாரி முறைப்பாடு

யாழ்.மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக தீவகத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு தெரிவித்தார்.

கடமை நிமித்தம் யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் செனிவிரட்ணவை, தான் சந்திக்கச் சென்ற சமயம் தன்னை இழிவான வார்த்தைகளால் பேசியதுடன், தன்னைத் தாக்க வந்ததாகவும்,

தன்னுடைய பதவிக்கு உரிய மரியாதை கொடுக்கத் தவறியதுடன், உயர் அதிகாரிக்குரிய பண்புடன் நடந்து கொள்ளவில்லை எனத் தெரிவித்துமே முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்ட யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் இந்த விடயம் தொடர்பாக, விரைவில் விசாரணை நடத்தவுள்ளதுடன் அதிகாரத் துஷ்பிரயோகம், தனிப்பட்டவரின் மனம் புண்படும்படியாக நடந்து கொண்டமை தொடர்பாகவும், விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர். (ப)

## அடிப்படை உரிமைகள் மீறியதாக

# அத்துருகிரியவில் தேடுதல் நடத்திய பொலிஸ் அதிகாரி மீது குற்றச்சாட்டு!

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில், இராணுவ உளவுப் பிரிவின், மறைவிடத்தைச் சுற்றிவளைத்து, அங்கிருந்த இராணுவ அதிகாரிகளை கைது செய்ததன் மூலம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

இராணுவக்கப்டன் முகமட் நிலாம் உட்பட, உளவுப்பிரிவு அதிகாரிகள் ஐவர் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவைப்பரீசிலித்த பின்னரே, உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

அத்துடன், ஒவ்வொரு இராணுவ அதிகாரிக்கும் தலா ஏழு இலட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக வழங்குமாறு அரசாங்கத்திற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அடிப்படை மனித உரிமை மீறலை மேற்கொண்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல, பாதிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாவை வழங்க வேண்டும் எனவும், உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

உடுகம்பொலவின் இந்த செயற்பாடுகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிஸ்மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் பணிப்புரை வழங்கியது.

## நூற்றாண்டு விழா முத்திரை வெளியீடு

சாவகச்சேரி இந்துக்கல்லூரிய நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக நினைவு முத்திரையொன்று இன்று வெளியிடப்படவுள்ளது.

இந்த வைபவம் இன்று காலை 10 மணியளவில் கல்லூரி அதிபர் க.கைலாயநாதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நினைவு முத்திரையை வட. மகாண அஞ்சல் மா அதிபர் வெளியிட்டுவைக்க, அதனை நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி பெற்றுக்கொள்வார்.

# எழுதுமட்டுவாழ்...

என்ற கோசங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டம், வலயக்கல்விப்பணிப்பாளர், இலங்கை இராணுவம் போன்றவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது.

இந்த மறியறபோராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், கண்காணிப்புக்குழு பிரதிநிதி பீற்றர் மாக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களிடம் கிராம அபிவிருத்தி சங்க அன்னையர் முன்னணி தலைவி மோகனாவதி 11.15 மணிக்கு மகஜரைக் கையளித்தார். இதனை அடுத்து மறியற் போராட்டம் முடிவடைந்தது. இந்த மகஜருக்கு தீர்வு எதுவும் கிடைக்காவிட்டால் கண்டி வீதியை மறித்து போராட்டம் நடத்தவிருப்பதாகவும் தெரிவித்தார். (29,25)

# மின்சாரக் கட்டணம்...

இந்தக் கட்டாய அதிகரிப்பு தொடர்பாக கருத்துத் தெரிவித்த இலங்கை மின்சாரசபையினர், இதுவரை நீர் வீழ்ச்சிகளில் இருந்து பெற்ற நீர் மூலம் உயர்வலுக்கொண்ட மின்னை உற்பத்தி செய்யமுடிந்தது.

தற்பொழுது நீர்நிலைகள்ில், நீர் வற்றிக் கொண்டு செல்வதனால் உயர்வலு மின்ன்ன உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, உயர்வலுவுள்ள மின்னை உற்பத்தி செய்வதற்கு பாரிய இயந்திரங்களையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, இதற்கான செலவு அதிகமாகவுள்ளது. இதனால், தற்போது அதிகரிக்க எண்ணியுள்ள கட்டண அதிகரிப்பு இந்தச் செலவிற்கு ஈடு செய்வதாக அமையும்.

பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து மின் இயந்திரங்கள் மூலம் மின்னை உற்பத்தி செய்யும் நடவடிக்கை தொடங்கப்படலாமெனவும் மின்சாரசபையினர் தெரிவித்தனர்.

## இளைஞன்....

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வயலில் சூடடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மேற்படி இளைஞன் மீது, மறைந்து இருந்து இனம் தெரியாத நபர்கள் பெற்றோலை ஊற்றி தீப்பற்றவைத்தனர்.

தீப்பற்றிய இளைஞன் தனது வீட்டுக்கு ஓடிச்சென்று வீட்டு முற்றத்தில் வீழ்ந்து உருண்டவுடன் தீ அணைந்தது.

பின்பு உறவினர்களின் உதவியுடன் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## யாழ்....

கந்தையா மகாலிங்கம் (வயது-58) நீர்வேலி வடக்கு கோப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்தவர் என இனங் காணப்பட்டது.

யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள மதுபான நிலையத்திற்கு முன்பாக சடலம் ஒன்று இருக்கின்றது என பொலிசாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே அங்கு சென்ற பொலிஸார் இறந்தவரின் உடலை எடுத்துச் சென்று யாழ்.போதனா வைத தியசாலையில் ஒப்படைத்தனர். (121)

## தனியாக....

கூட்டமைப்பின் இறுதி இலக்கை அடைய இருப்பதோடு, வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மேம்படுத்தி நாட்டைக் கட்டி எழுப்பி, அபிவிருத்தி செய்வது புதிய கூட்டமைப்பின் பிரதான நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஈ.பி.டி.பி மற்றும் இந்தக் கூட்ட மைப்புக்கு ஆதரவு தரும் கட்சிகளின் பிரதி நிதிகளும் கலந்து கொணடனர்.

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P. :- 0214 - 590222 E - mail :-etouch@wow.lk

மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலைநேர (4.00 p.m to 7.00 p.m) வகுப்புக்கள் ஆரம்பம்.

| COURSE NAME | COURSE FEES | DURATION |
|---|---|---|
| Diploma in pc handling | FREE | 6 weeks |
| Diploma in Microsoft office | 1500/= | 3months |
| Diploma in Information Technology | 1500/= | 3months |
| Diploma in Multimedia | 2000/= | 3months |
| Diploma in Desktop publishing | 2000/= | 3months |
| Diploma in Engineering Drawing | 2000/= | 3months |
| Diploma in Computer programming | 2000/= | 4months |
| Diploma in Computer Hardware | 2500/= | 4months |
| Sri Lanka Computer Driving Licence | 3000/= | 4months |

REGISTRATION FEES 1100/=

- புதிதாக கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் f z d p Diploma in pc Handling (Online Class) பதிவுக் கட்டணம் மட்டுமே அறிவிடப்படும்!!!
- GIT பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர (3.30 to 4.30) கற்கைநெறி - Diploma in Information Technology.
- இலங்கை அரசினால் நடத்தப்பெறும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழிற்கான (Sri Lanka Computer Driving Licence - SL CDL) வகுப்புக்கள்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 02.02.2004
Director
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P. :- 0214 - 590222 (610) E - mail :-etouch@wow.lk

உலகெங்கிலும் உள்ள உறவுகளிடமிருந்து விரைவாக பணத்தினை பெற்றுக்கொள்ள
WESTERN UNION ® வெஸ்டன் யூனியன்
MONEY TRANSFER பணப்பரிமாற்றம்
மூலம் சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மை நாடுங்கள்
திருமுருகன் கொம் நெற்.
T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E.mail:thirumurugan@eudoramail.com
46. ஆடியபாதம் வீதி.
(ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.